# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com | www.facebook.com/ilakkutamilnews | https://twitter.com/Ilakku1

இதழ் 238 | சனி, ஜூன் 10, 2023 | 14 பக்கம்


# இலங்கையில் டொலர் வீழ்ச்சி
## உண்மையில் நடப்பது என்ன?







கலாநிதி **எம்.கணேசமூர்த்தி** செவ்வி



## சிறப்புரிமை சிங்களவர்களுக்கு மட்டும்தானா?

அகிலன்

## அமெரிக்காவை விட்டுவிலகி சீனாவை அரவணைக்கும்



## மத்திய கிழக்கு நாடுகள்

தமிழில்: **ஜெயந்திரன்**

# கஜேந்திரகுமார் கைது குறித்து ஆழ்ந்த கவலை அடைகிறேன்

## அமெரிக்க எம்.பி Summer Lee


Congresswoman Summer Lee
@RepSummerLee · Follow

While I welcome the release of MP @GGPonnambalam, I am deeply concerned by his arrest — another example of the anti-democratic intimidation and harassment utilized by the Sri Lankan state to try and silence Tamil people's demands for a political solution & accountability.

3:21 AM · Jun 9, 2023

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுதலை செய்யப்பட்டதை வரவேற்கும் அதே வேளை அவரது கைது குறித்து நான் ஆழ்ந்த கவலையடைகிறேன் என அமெரிக்க ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமர் லீ (Summer Lee) தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் தளத்தில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்தது குறித்து நான் ஆழ்ந்த கவலையடைகிறேன்.

அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகளை மௌனமாக்குவதற்கு இலங்கை அரசால் பயன்படுத்தப்பட்ட ஜனநாயக

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# யாழ்ப்பாணம்–வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரத்தை உருவாக்கிய விவசாயி

வெங்காய செய்கையினை இலகுவாக்கும் வகையில் வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உருவாக்கியுள்ளார்.



அச்சுவேலி பகுதிகயைச் சேர்ந்த விவசாயி ஒருவர் இரண்டு வருடங்களுக்கு மேலாக லாண்ட் மாஸ்டர் இயந்திரத்தை பயன்படுத்தி வெங்காயத்தை நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் செலவினங்களை குறைத்து வெங்காயத்தினை நடுகை செய்யும் முறையினை கண்டுபிடித்துள்ளார்.

இதனூடாக வெங்காயத்தினை நடுகை செய்வதற்கு ஏற்படும் செலவீனத்தை பல

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# சீனாவை எதிர்கொள்ள இந்தியாவுக்கு பல பத்து ஆண்டுகள் எடுக்கும் - சீனா அதிகாரி

களமுனையில் சீனாவை எதிர்கொள்வதற்கான தகுதி தற்போது இந்தியாவிடம் இல்லை எனவும் அதனை இந்தியா எட்டுவதற்கு பல பத்து ஆண்டுகள் செல்லும் எனவும் கடந்த வாரம் சிங்கப்பூரில் இடம்பெற்ற IISS Shangri-La Dialogue எனப்படும் ஆசிய பிராந்திய நாடுகளின் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்ட சீன படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தற்போதைய படைத்துறை உற்பத்தியும், நவீனமயப்படுத்துல்களும், சீனாவை எதிர்கொள்ள போதுமானதல்ல என சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.





சிங்கப்பூரில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டபோதும் சீனாவின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ரஸ்யாவுக்கு ஆதரவாக பேசியவருக்கு ஜேர்மனியில் அபராதம்

உக்ரைன் மீதான ரஸ்யாவின் படை நடவடிக்கை அவசியமானது என கருத்து தெரிவித்த ஜேர்மனியில் வாழும் உக்ரைன் பெண் ஒருவருக்கு ஜேர்மனின் நீதிமன்றம் 900 ஈரோக்கள் அபராதம் விதித்துள்ளது.



இந்த கருத்தை தெரிவித்ததன் மூலம் அமைதிக்கான செயற்பாட்டாளரான எலோனா கொபஸ்னி கோவா (48) என்பவர் அமைதிக்கு குந்தகமாக இருக்கிறார் என ஜேர்மனின் கொலோன் பகுதி நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எனினும் ஜேர்மனின் இந்த கருத்து சுதந்திர அடக்குமுறைகளுக்கு எதிராக தாம் உயர் நீதிமன்றம் செல்லவுள்ளதாக பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# உக்ரைனில் அணை தகர்ப்பு

## சேதத்தை மதிப்பிடுகின்றது உலக வங்கி



கடந்த செவ்வாய்க்கிழமை (6) உக்ரைனின் கேர்சன் பகுதியில் நீர்மின்சாரத்திற்காக கட்டப்பட்ட மிகப்பெரும் அணை தகர்க்கப்பட்டதால் 5 இலட்சம் ஹெக்டயர் பரப்பளவுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், இந்த அனர்த்தத் தின் சேதத்தை உலக வங்கி மதிப் பிடுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த அணையின் அழிவு சூழலியல் ரீதியாகவும், அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என உலக வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் அர்னா பேர்டே தெரிவித்துள்ளார்.

இந்த அணையின் தகர்ப்பு தொடர்பில் ரஸ்யாவும், உக்ரைனும் ஒருவரை ஒருவர் குற்றம்சுமத்தி வருகின்றனர். கடந்த வருடம் இந்த அணையினை உக்ரைன் படையினர் தகர்க்கப்போவதாக தெரிவித்த ரஸ்யா அதனால் ஏற்படும் அழிவில் இருந்து தமது படையினரை பாதுகாக்கும் நோக்கத்துடன் 30,000 படையினரை அங்கிருந்து வெளியேற்றியிருந்தது.

அணையின் ஒரு புறம் ரஸ்யா படையினரும் மறுபுறம் உக்ரைன் படையினரும் நிலைகொண்டிருந்ததுடன், அங்கு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இருதரப்பும் புதைத்துவைத்த கண்ணிவெடிகள் நீருடன் அடித்துச் சென்றுள்ளதால் பாரிய அனர்த்தம் ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம், பல பத்தாயிரம் மக்கள் குடிநீர் வசதிகள் இன்றி அல்லல்படுவதாகவும், இருதரப்பும் பல ஆயிரம் மக்களை அங்கிருந்து வெளியேற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே உக்ரைனில் ஏற்பட்ட அழிவுகளை மீள்புனரமைப்பு செய்ய 411 பில்லியன் டொலர்கள் செலவாகும் என கணிக்கப்பட்டிருந்தபோதும், தற்போதைய புதிய அழிவு அதனை மேலும் அதிகரிக்கும் என பேர்டே மேலும் தெரிவித்துள்ளார்.

# காட்டுத்தீயால் எரிகின்றது கனடா

## வளிமண்டலம் மாசாகின்றது

என்றுமில்லாதவாறு இந்த வருடம் கனடாவில் காட்டுத்தீ மிகவும் அதிகளவில் பரவி வருகின்றது. கடந்த புதன்கிழமை (7) கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 400 இடங்களில் தீ எரிவதாகவும், அதில் 239 இடங்களில் எரியும் தீ அணைக்கமுடியாத அளவுக்கு பரவிவிட்டதாகவும் கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

கியூபெக் மனிலத்தில் மட்டும் கடந்த புதன்கிழமை 160 இடங்களில் காட்டுத்தீ பரவியுள்ளது. பல மானிலங்களில் இருந்து பல பத்தாயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். 20,000 இற்கு மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

இந்த தீயினால் இதுவரையில் 9.4 மில்லியன் ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீயின் புகையினால் வானத்தின் நிறம் மாறியுள்ளது. மஞ்சள் மற்றும் சாம்பல் நிறமாக வானம் காட்சி தருகின்றது என கனடாவின் காலநிலை மாற்ற பாதுகாப்பு நடைவடிக்கை அமைப்பின் தலைவர் கரோலின் போலெற்றே தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்திற்கு காலநிலை மாற்றமே காரணம். ஒட்டாவா, மொன்றியல் மற்றும் ரெரொன்டோ ஆகிய பகுதிகளில் வானத்தின் நிறம் மாறியுள்ளதுடன் தீ எரிவதன் வாசனையையும் உணரமுடிவதாக அங்கிருந்து

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அமெரிக்காவின் ஆயுதங்களை நாடும் இந்தியா



அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஆயுத வர்த்தகம் வேகமாக அதிகரித்து வருகின்றது. 2008 ஆம் ஆண்டு புறக்கணிக்கத்தக்க அளவில் இருந்த இந்த வர்த்தகம் தற்போது 25 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவிடம் இருந்து சி-130 இராணுவ சரக்கு விமானங்கள், ஏவுகணைகள், ஆளில்லாத தாக்குதல் மற்றும் உளவு விமானங்கள் மற்றும் கடல் பாதுகாப்பு கண்காணிப்பு விமானங்கள் என்பவற்றை கொள்வனவு செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது.

முன்னர் ரஸ்யாவிடம் இருந்தே இந்தியா அதிக ஆயுதங்களை கொள்வனவு செய்துவந்தது. பல ஆண்டுகளுக்கு முன்னர் 68 விகிதமாக இருந்த இந்த கொள்வனவு தற்போது 45 விகிதமாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இலங்கையில் சிவில் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு குரல் கொடுக்குமாறு பிரிட்டனிடம் அந்நாட்டு பா. உ. எர்வர்ட் டேவி கோரிக்கை



இலங்கை பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இலங்கையில் சிவில் உரிமைகளும் அரசியல் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பிரிட்டன் அரசாங்கம் குரல்கொடுக்க வேண்டும் என்று அந்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் டேவி *(Edward Davey)* வெளிவிவகார செயலாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தொடர்பில் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் கடும் கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கஜேந்திரகுமாரின் கைது தொடர்பில் கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்த நிலையில், இதுகுறித்து பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் டேவி அந்நாட்டு வெளிவிவகாரசெயலாளருக்குக்கடிதமொன்றைஅனுப்பி வைத்துள்ளார்.

இலங்கையில் மீண்டுமொரு கரிசனைக்குரிய சம்பவம் நிகழ்ந்திருப்பதாகவும்,தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள எட்வர்ட் டேவி எம்.பி, இச்சம்பவம் இலங்கை வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் பிரிட்டனில் வசிக்கும் தமிழ்ச்சமூகத்தின் மத்தியிலும் தீவிர கரிசனையைத் தோற்றுவித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு தனது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பில் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்குத் திட்டமிட்டிருந்த நிலையிலேயே கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவரது தந்தையார் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலப்பகுதியிலேயே கொல்லப்பட்டதாகவும் அக்கடிதத்தில் எட்வர்ட் டேவி தெரிவித்துள்ளார்.

எனவே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் நிலை குறித்து தகவல் வழங்குமாறும், இவ்விடயத்தில் பிரிட்டன் சார்பில் இலங்கை அரசாங்கத்துடன் ஏதேனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றும் அவர் வெளிவிவகார செயலாளரிடம் கோரியுள்ளார்.

மேலும் தற்போது இலங்கை பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கும் சூழ்நிலையில், இலங்கையில் சிவில் உரிமைகளும் அரசியல் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பிரிட்டன் அர சாங்கம் குரல்கொடுப்பது அவசியம் என்றும் எர்வர்ட் டேவி எம்.பி அக்கடிதத்தில் வலியுறுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இலக்கு

# ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் கையறுநிலையால் ஈழத்தமிழர்களின் இறைமையறு நிலை தோற்றம்

ஈழத்தமிழர்களுக்குச் சாதகமான அனைத்துலக சூழ்நிலைகள் தோற்றம் பெறுகின்ற காலங்களில் எல்லாம் சிறிலங்கா அரசபயங்கரவாதத்தை வேகப்படுத்தி அதற்கு எதிர்வினையாற்றித் தங்களின் உயிரையும் உடமைகளையும் வாழ்வாதாரங்களையும் ஈழத்தமிழர்கள் பாதுகாக்க முற்படுகையில் அதனை பயங்கரவாத நடவடிக்கையெனத் திரிபுபடுத்திச் சிறிலங்காவின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கான தேசிய பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஈழத்தமிழர்கள் மேல் இனஅழிப்பை மேற்கொள்ளவது என்பது சிறிலங்காவின் தந்திரோபாயமாக என்றும் தொடர்கிறது. இதனை சிறிலங்காவின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் பேணுகின்றோமென உரைத்து இந்தியா தனக்கு ஆதரவு நாடுகளையும் இணைத்து சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்புக்கு அனைத்துலகச் சட்டங்கள் அதனைச் செய்யும் சிறிலங்காத் தலைமைகள் மேல் பாயாது தடுப்பது இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையாகத் தொடர்கிறது.

அத்துடன் ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினை என்பது இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொடர்ந்து வரும் தங்களின் இறைமையின் அடிப்படையில் தங்களின் பிரிக்கப்பட முடியாத தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தித் தங்களுக்கான தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளுடனான தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே உருவாக்கிப் பாதுகாப்பான அமைதி வாழ்வில் வளர்ச்சிகள் கொண்ட தேசஇனமாக இலங்கையில் உள்ள சிங்களத் தேசஇனத்துடனும் மற்றைய தேசியங்களுடனும் உலகுடனும் வாழுதல் என்னும் தங்களின் அடிப்படை மனித உரிமையை உறுதி செய்வதாகும். ஆனால் சிறிலங்காவும் இந்தியாவும் ஈழத்தமிழரின் பிரச்சினை என்பது சிறுபான்மை இனப்பிரச்சினை என்ற திரிபு படுத்தலை மேற்கொண்டு சிறிலங்காவின் இறைமையை மீறி ஈழத்தமிழர்களுக்கு அனைத்துலக நாடுகளோ அனைத்துலக அமைப்புக்களோ அதீத மனிதாயப் பிரச்சினைகளில் கூட அனைத்துலகச் சட்டங்களின் கீழ் உதவ அனுமதிக்க மறுத்து வருகின்றன.

ஈழத்தமிழர் தாயகத்தின் மீதான இந்த அந்நியத் தலையீட்டாலேயே, சிறிலங்காவின் இறைமையை மீறி உலகநாடுகளும் உலக அமைப்புக்களும் 148000 ஈழத்தமிழர்கள் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இனப்படுகொலை வரலாற்றை 2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு மூலம் சிறிலங்கா உருவாக்கிய நிலையிலும் இன்றுவரை 14 ஆண்டுகள் ஈழத்தமிழர்களுக்கான பரிகார நீதியையோ இனவழிப்பு செய்தவர்களுக்கான தண்டனை நீதியையோ வழங்கவோ, அல்லது தொடர்ந்து இன்று வரை சிறிலங்கா தொடரும் ஈழத்தமிழர் பண்பாட்டு இனஅழிப்புடன் கூடிய, சட்டத்தின் முன் சிங்களவர்களே உயர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் இனஅழிப்புச் செய்த படையினரையே நிர்வாகிகளாகக் கொண்ட பாராளுமன்ற கொடுங்கோன்மை ஆட்சியையோ தடுத்து நிறுத்த இயலாத நிலையில் உள்ளனர்.

இதனால் படுஉற்சாகம் அடைந்து வரும் சிறிலங்கா கடந்த வாரத்தில் ஈழத்தமிழர்களின் இறைமையாளர்களில் ஒருவராகிய யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களைத் தனது புலனாய்வாளர்களைப் பயன்படுத்தி இனப்படுகொலை செய்ய முயற்சித்து அது தோல்வி அடைந்ததும் சட்டத்துக்கு எதிரான முறைகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களைப் பொலிசாரைக் கொண்டே கைதுசெய்து அவர் தமிழராக இருப்பதால் நாடாளுமன்றச் சிறப்புரிமை அவருக்கு இல்லை என்ற தோரணையில் நாடாளுமன்ற அமர்வில் பங்குபற்ற அனுமதிக்காது கிளிநொச்சிக்குக் கொண்டுவந்து 5 இலட்சம் ரூபா பிணையில் வெளிவர விட்டுள்ளனர். அதே நேரத்தில் சிறிலங்காப் புலனாய்வாளர்களின் கிரிமினல் குற்றச் செயலான கொலை முயற்சியைப் படமெடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் அருள்மதி உதயக்குமார் என்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இரு செயற்பாட்டாளர்களையும் கைதாக்கி பிணையனுமதிக்காது விளக்க மறியலில் வைத்து ஈழத்தமிழர்களுக்குச் சிறிலங்காவின் படையினரின் கிரிமினல் குற்றச் செயல்களை வெளிப்படுத்த முயன்றால் உங்களுக்கும் இந்நிலையென்று இனங்காணக் கூடிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

சிறிலங்காவின் அரசத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூட்டுப்படைத் தளபதிக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கி, துணைக் கூட்டுப்படைத் தளபதியொருவரைப் புதிதாக உருவாக்கி அவரைப் பாதுகாப்புச் செயலாளருடன் இணைத்து பெருந்தொகையான நிதி ஒதுக்கீட்டை இராணுவத்தினரைப் பலப்படுத்த வழங்கி எதிரிகளுடைய செயல்களை இனங்கண்டு அதற்கு எதிர்வினையாற்றும் படி பணித்துள்ளார். அவரின் அரசியல் குருவும் உறவினருமான ஜே. ஆர். ஜயவர்த்தனா 1979 இல் படையினர்க்கு கண்ட இடத்தில் சுடவும் சுட்ட இடத்தில் எரிக்கவும் எல்லையற்ற அதிகாரங்களை வழங்கி அதன் பின்னர் அவரின் மருமகனான பிரிகேடியர் கொப்பே கடுவாவினை அரசியல் விழிப்புணர்வுள்ளவர்களை அந்த ஆண்டு முடிவதற்குள் சுட்டுத்தள்ளுமாறு காலஎல்லை நிர்ணயித்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிய பாணியில் தற்போது செயற்படத் தொடங்கியுள்ளார். இதற்கான முதலடி வைப்பே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மேலான கொலை முயற்சி. இதனால் அரசபயங்கரவாதம் மீண்டும் தொடங்கியுள்ளமை வெளிப்படை. வெள்ளை வான் கடத்தல்களும் வேகம் பெற்றுள்ளன. வெளிநாட்டுப் பிரிவினைவாதிகள் என்ற பெயர் புலம்பெயர் தமிழர்களுக்கு முஸ்லீம் அமைச்சர் மூலம் சூட்டப்பட்டுள்ளது. அத்துடன் அந்த அமைச்சர் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையை நாய்குலைப்பு எனவும் பாராளுமன்ற ஏட்டில் பதிவாக்கியுள்ளார் ஒலி ஒளி பரப்புகளுக்கான ஊடக அதிகாரசபை சமுகவலைத்தளங்களை முடக்க உருவாக்கப்பட்டு வருகிறது. இவை எல்லாம் அரசபயங்கரவாதம் உச்சக்கட்டமாக ஈழத்தமிழர்கள் மேலான போராக மாற்றப்பட்டு வருவதற்கு அறிகுறிகளாக உள்ளன.

இதற்கிடை தமிழன் என்னும் பத்திரிகை தனது 08.03.2023ம் திகதிய ஆசிரிய தலையங்கத்தில் "2008ம் ஆண்டு பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாயா மீதான தற்கொலைக் குண்டு வெடிப்புத் தாக்குதலானது திட்டமிட்டுச் செய்யப்பட்ட உள்வேலை. இதனை மையப்படுத்தியே நோர்வேயின் சமாதான முயற்சிகளுடன் கூடிய போர்நிறுத்தத்தில் இருந்து பின்வாங்கி சிறிலங்கா மீண்டும் யுத்தத்தைத் தொடங்கியது" என கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டி இது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் எனவும் சிறிலங்கா அரசாங்கமே உருவாக்கிய இந்த அரசபயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டு அந்த வழக்கில் சிறையில் இருந்தவர்களுக்கும் சிறையில் இருப்பவர்களுக்கும் நீதி மீள்வழங்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளது. இது சிறீலங்கா தானே அரசபயங்கரவாதத்தைச் செய்து அதன் பின்னர் ஈழத்தமிழர் மேல் இனஅழிப்புச் செய்யும் உத்திக்கு மேலுமோர் உதாரணமாகிறது. இதற்கிடை சம்பந்தர் தலைமையிலான ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் கையறுநிலையால் ஈழத்தமிழர்களின் இறைமையறு செயலாக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் வடக்கு கிழக்கு மாகாணசபைகளுக்கான "இடைக்கால நிர்வாகக் கோரிக்கை" ரணிலால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதே வேளையில் சம்பந்தன் அவர்கள் "உள்ளக தன்னாட்சி அடிப்படையில் ஈழத்தமிழர்களுக்கான தீர்வு ஒரிரு மாதங்களுக்குள் வழங்கப்படா விட்டால் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தீர்வைப் பெறும் முயற்சிகளில் நாங்கள் வெளிப்படையாகவே இறங்குவோம்" எனச் சாத்தான் வேதம் ஓதிய கதையாகச் சிறிலங்காவின் அரசத்தலைவருக்கு முன்பாக முழங்கியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது இந்த வாரத்து நகைச்சுவைப்பேச்சா என்பது தான் இலக்கின் கேள்வி. இனியாவது இந்த ஈழத்தமிழ் அரசியல் வாதிகள் திருந்துவார்களா? கண்கெட்ட பின்னர் சூரிய வணக்கம் தான் இவர்கள் கதை.

**ஆசிரியர்**



# சிறப்புரிமை சிங்களவர்களுக்கு மட்டும்தானா?

அகிலன்

கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைதும், கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு அன்று மாலை அவர் விடுதலை செய்யப்பட்டமையும் இரண்டு விடயங்களை உணர்த்தியிருக்கின்றது. சட்டத்தின் மூலமாக பாதுகாப்பும் நலன்களும் எப்போதும் சிங்களவர்களுக்கு மட்டும்தான் என்பது முதலாவது. எந்த அரசாங்கமாக இருந்தாலும் இனவாத கட்சிகளின் குரலுக்குத்தான் செவிசாய்க்கும் என்பது இரண்டாவது.

கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டதும், ஒரு நாள் முழுக்க அவர் அலைக்கழிக்கப்பட்டதும் தெளிவான ஒரு உள்நோக்கத்துடன்தான் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் கஜேந்திரகுமாருக்கு சில சிறப்புரிமைகள் உள்ளன. அதில், முக்கியமானது, நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரையாற்றவுள்ள நிலையில் எம்.பி. ஒருவரை கைது செய்யக்கூடாது என்பது. அவ்வாறு கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தால், அவர் தனது நாடாளுமன்ற உரையை முடித்த பின்னர் கைது செய்ய வேண்டும் என்பதுதான் நடைமுறை.



செவ்வாய்கிழமை (06-06-2023) நாடாளுமன்றம் கூடிய போது இரண்டு விடயங்களை சபாநாயகரிடம் தெரியப்படுத்தியிருந்தார்கஜேந்திரகுமார். முதலாவது, முதலாவது, மருதங்கேணியில் நாடாளுமன்ற உறுப்பினரான தனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பானது. இரண்டாவது, இது தொடர்பாக மறுநாள் புதன் கிழமை (07-06 -2023) சிறப்ரிமைப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பப்போதாகவும் தெரியப்படுத்தினார். அதாவது, புதன்கிழமை கஜேந்திரகுமார் நாடாளுமன்றத்தில் உரையாற்றப்போகின்றார் என்பது பகிரங்கமாகத் தெரியப்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்துக்குள் இது நடைபெற்ற அதேவேளையில், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் இதனுடன் தொடர்புபட்ட இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றன.

முதலாவது சம்பவம் கஜேந்திரகுமா ருக்கு வெளிநாடு செல்வதற்கான தடைகிளிநொச்சி நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது. அத்துடன் வியாழக் கிழமை (08-06-2023) அவர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான கடிதம் கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கஜேந்திரகுமாரின் கொழும்பு இல்லத் தில் வைத்து அவரிடம் கொடுக்கப் பட்டது.

இரண்டாவது சம்பவம், செவ்வாய் கிழமையன்றே "சிங்கள ராவய" என்ற இனவாத அமைப்புநாடாளுமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. கஜேந்திரகுமார் சிறப்புரிமையைக் கிளப்பி உரையாற்றுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்பதுதான்அவர்கள் முன்வைத்த ஒரே கோரிக்கை. சபா நாயகரிடம் இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தார்கள். இல்லையென்றால், நாடாளுமன்றம் முற்றுகையிடப்படும் என்றும் அவர்கள் எச்சரித்தார்கள்.





இந்தப் பின்னணியில்தான் கஜேந்திரகுமார் புதன்கிழமைகாலை வீட்டில்வைத்துகைது செய்யப்படுகின்றார். நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்காக முன்னறிவித்தல் கொடுத்திருந்த நிலையில் தன்னைக் கைது செய்ய முடியாது என்பதையும், வியாழக்கிழமை மருதங்கேணி பொலிஸில் ஆஜராவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதற்காக அவசரமாக கைது செய்ய வேண்டும் என்ற கஜேந்திரகுமாரின் கேள்விக்கு பொலிஸாரிடம் பதில் இருக்கவில்லை.

அதனைவிட அவரைக் கைது செய்வதற்காக வாரன்ட் கூட பொலிஸாரிடம் இருக்கவில்லை. இது தொடர்பாக சபாநாயகரிடமும் அவர் உடனடியாகவே முறைப்பாடு செய்திருக்கின்றார். சபாநாயகர் கேட்ட போதும் கைது வாரன்ட் தம்மிடம் இல்லை என்பதை பொலிஸார் ஒப்புக்கொண்டார்கள். நாடாளுமன்றத்தில் தனது உரையை முடித்தபின்னர் வருவதாக கஜேந்திரகுமார்சொன்னதையும்பொலிஸார்கேட்கவில்லை. சபாநாயகரும் இந்த விவகாரத்தில் உறுதியாக தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

சபாநாயகரின் பாத்திரமும் இந்த விவகாரத்தில் சந்தேகத்துக்குரிதாகவே உள்ளது. எம்.பி.க்களின் சிறப்புரிமையைப் பாதுகாப்பது தான் சபாநாயகரின் பிரதான பணி. அதானால்தான் எம்.பி. ஒருவரை கைது செய்யும் போது, சபாநாயகரிடமிருந்து அதற்கான முன்னனுமதி பெறப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதிலும், எம்.பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் முக்கியமான உரை ஒன்றை நிகழ்த்துவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கும் நிலையில், அவரை கைது செய்து கிளிநொச்சிக்கு கொண்டு செல்வதற்கு சபாநாயகர் எவ்வாறு அனுமதி வழங்கினார்?

நாடாளுமன்றத்தில் அவர் உரை நிகழ்த்திய பின்னர் ஆளை கொண்டு செல்லுங்கள் என சபாநாயகர் உறுதியாகக்கூறியிருக்க முடியும். கஜேந்திரகுமாரிடம் அவ்வாறு கூறிய சபாநாயகர் பொலிஸாரிடம் பம்பிக்கொண்டு இருந்தமைக்கு என்ன காரணம்?

கொலைக் குற்றத்துக்காக சிறையிலிருந்த எம்.பி.யையே நாடாளுமன்றத்துக்கு உரையாற்ற அழைத்துவந்த நாடு நம்ப நாடு. அண்மையில் தங்கம் மற்றும் கைப்பேசி கடத்தலுக்காக கைதான எம்.பி. ஒருவர் கூட பிணையில் விடுதலையானவுடன் நேராக நாடாளுமன்றம் வந்ததையும் நாம் பார்த்தோம். இந்த நிலையில், வியாழக்கிழமை பொலிஸ் ஆஜராகச் சொன்ன நிலையில், புதன் கிழமை காலை கஜேந்திரகுமாரை கைது செய்து கிளிநொச்சி வரை கொண்டு செல்ல வேண்டிய அவசியம் - அவசரம் என்ன?

**முதலாவது** - சிங்கள ராவய அமைப்பைத் திருப்திப் படுத்துவது!

**இரண்டாவது** - சிறப்புரிமைப் பிரச்சினை கிளப்பப்பட்டால் பொலிஸார் புலனாய்வுப் பிரிவினரின் அடாவடித்தனமான செயற்பாடுகள் அம்பலமாகும் என்பதால் அதனைத் தடுப்பது!

ஆக, சிறப்புரிமை என்பது சிங்கள எம்.பி.க்களுக்கு மட்டும்தான். தமிழ் எம்.பி.க்களுக்கு அது ஏட்டுச் சுரைக்காய்தான். சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்த அந்த சிறப்புரிமை கூட கால்களில் போட்டு மிதிக்கப்படும் என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

தமது கட்சியின் வளர்ச்சியைக் கண்டு அதனைத் தடுப்பதற்கான முயற்சியாகவே இவை இடம்பெற்றிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சொல்லிவருகின்றது. இந்த கைதுக்குப் பின்னர் தாயகத்திலும், சர்வதேச அரங்கிலும் கஜேந்திரகுமாரின் இமேஜ் அதிகரித்துள்ளது.

கஜேந்திரகுமாரை கடுமையாக விமர்சித்து வந்த ஏனைய தமிழக் கட்சிகளின் தலைவர்கள் கூட, இப்போது கஜேந்திரகுமாருக்கு ஆதரவாக குரல் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பல்வேறு தரப்பினரும் முன்னணி என்ன செய்கின்றது என திரும்பிப் பார்க்கத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த சம்பவத்தில் நன்மையடைந்திருப்பவர் ரணில் விக்கிரமசிங்கதான். சிங்களக் கடும் போக்காளர்களை இதன்மூலம் அவர் திருப்திப்படுத்தியுள்ளார். தமிழ்த் தேசியத்தில்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

நேர்காணல்

# இலங்கையில் டொலர் வீழ்ச்சி
# உண்மையில் நடப்பது என்ன?



**இலங்கையில் உச்சத்துக்குச் சென்றிருந்த டொலரின் பெறுமதி கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதன் பிரதிபலிப்பாக தங்க நகைகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. இதன் பின்னணியில் இருக்கக்கூடிய பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த விடயங்கள், அதனைவிட உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் எதிர்கொள்ளப்படும் நெருக்கடிகள் தொடர்பாக இந்த வாரம் உயிரோடைத் தமிழின் தாயகக் களம் நிகழ்வுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி வழங்கிய நேர்காணலின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்குத் தருகின்றோம்.**



கலாநிதி **எம்.கணேசமூர்த்தி** செவ்வி

**இலங்கை ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதி அண்மைக்காலத்தில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாக ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. இது ஏற்றுக் கொள்ளக்கூடியதா?**

இது தொடர்பில் இரண்டு வகையான கருத்துக்கள் உள்ளன. அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள் இந்த ரூபாவின் பெறுமதி உயர்வை இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றமாகக் காட்டுவதற்கு முற்படுகின்றார்கள். மற்றைய தரப்பினர் இதனை நுணுக்கமாக ஆராய்ந்து கருத்து வெளியிடும் போது, இது ஒரு தற்காலிகமான நிலைமை என்று சொல்கின்றார்கள். டொலருக்கான கேள்வி குறைவடைந்தமையும், இலங்கைக்குள் டொலரின் வருகை அதிகரித்திருப்பதும் இந்த நிலைமைக்கு காரணம் என்பது அவர்களுடைய கருத்து.

இந்த இரண்டாவது தரப்பினருடைய கருத்தையே நானும் ஆதரிக்கின்றேன். காரணம் - இலங்கையின் பொருளாதாரம் இப்போது சுருங்கியிருக்கின்றது. அதிகரிக்கப்பட்ட வரிகள் காரணமாக மக்களுடைய கொள்வனவு ஆற்றல் வெகுவாகக் குறைவடைந்திருக்கின்றது. பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகள் மிகக் குறைவடைந்திருக்கின்றது. இலங்கையிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் வெளிநாடுகளை நோக்கி நகர்கின்றன. இலங்கையின் உற்பத்தித்துறையில் பெரிய வீழ்ச்சி, இலங்கையின் நுகர்வில் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இந்த இரண்டும் டொலருக்கான கேள்வியைக் குறைத்திருக்கின்றன.

உள்நாட்டு முதலீடுகள் பெருமளவுக்கு அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை. மறுபுறம் இலங்கையின் பணச் சந்தையில் முதலீடுகள் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றது. வெளிநாடுகளிலிருந்தும் டொலர் உள்வந்திருக்கின்றது. உல்லாசப்பயணிகளின் வருகை காரணமாக டொலர் வருகையில் தற்காலிகமான ஒரு அதிகரிப்பு அண்மைக்காலமாக அவதானிக்கப்படுகின்றது. எனவே, இந்தக் காரணங்கள் ஒருபுறம் டொலருக்கான கேள்வியைக் குறைத்திருக்கின்றது. மறுபுறம் இலங்கைக்குள் டொலர் வரும் அளவு சற்று அதிகரித்திருக்கின்றது. இதனால்தான் டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்திருக்கின்றது. இதில் இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டும் - இலங்கை வெளிநாட்டுக் கடன் செலுத்துவதை முற்றாக நிறுத்தியிருக்கின்றது. இந்தக் கடன்களை மீளச்செலுத்துவதற்கு முற்படும் போது இந்த நிலைமை முழுமையாக மாற்றமடைவதற்கான சூழ்நிலை இருக்கின்றது. இதனைவிட, பல பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடைகளை விலக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இதனால், இறக்குமதிகள் அதிகரித்து அதற்காக அந்நியச் செலாவணி வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இந்த நிலைமையில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கலாம்.

அதேவேளை, தற்காலிகமாக செயற்கையான விதத்தில் டொலர் வெளிச்செல்லும் அளவை அரசாங்கம் குறைத்து வைத்திருக்கின்றது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் போது இந்த நிலைமைகளில் ஓரளவுக்கு மாற்றம் ஏற்படும். அதேபோல, வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் மீளச் செலுத்த முற்படுகின்ற போது, மில்லியன் கணக்கில் டொலர் வெளியே செல்லவேண்டியிருக்கும். இவ்வாறு பெருமளவு பணம் வெளியே செல்லும் போது அதனை ஈடுபட்ட வேண்டிய விதத்தில் ஏற்றுமதி வருமானங்களோ அல்லது உல்லாசப்பணிகளின் வருகையோ அல்லது வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தின் அளவோ அதிகரித்தால் மட்டும்தான். இலங்கை ரூபாவின் பெறுமதியைத் தக்கவைத்துக்கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளன.

ஆனால், நடைமுறையில் பார்க்கின்ற போது, இலங்கை இந்த கடன் மீளச்செலுத்தலை எப்போது ஆரம்பிக்கின்றதோ, அன்றைய தினத்திலிருந்து டொலர் இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் போக்கு காணப்படும். அதனை ஈடுசெய்யக்கூடியளவுக்கு இலங்கைப் பொருளாதாரம் ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்வதோ அல்லது உல்லாசப் பயணிகளின் வருகையை பலமடங்கு அதிகரித்துக் கொள்வதோ அல்லது வெளியிலிருந்து பணம் அனுப்புபவர்கள் அதனை ஈடுசெய்யக்கூடியளவுக்கு அதிகளவு பணத்தை அனுப்புவதோ சாத்தியமானது என நான் கருதவில்லை.

ஆக, இப்போது ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருப்பது தற்காலிகமானதாக இருக்குமே தவிர, நெடுங்காலத்துக்கு நீடிக்கக்கூடியதாக இருக்கும் என நான் கருதவில்லை.

**டொலர் பெறுமதி வீழ்ச்சி இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?**

உடனடியான தாக்கங்கள் என்று பார்க்கின்ற போது இந்த டொலரின் பெறுமதி குறைகின்ற போது இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும். மறுபுறத்தில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் வெளிநாட்டுச் சந்தையில் அதிகரிக்கும். இலங்கையின் ஏற்றுமதி ஏற்கனவே தேக்கமடைந்துள்ள நிலையில் இந்த விலை அதிகரிப்பு ஏற்றுமதிச் சந்தைகளை இலங்கை இழக்க வேண்டிய நிலை வருமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் இறக்குமதிப் பொருட்கள் இலங்கைச் சந்தையில் குறைந்த விலைக்கு கிடைக்கும் அதேவேளையில், ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் அதிகரிக்கும். இதனால், வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கைப் பொருட்கள் போட்டித்தன்மை குறைந்ததாக மாறும். இதுதான் உடனடியாக ஏற்படக்கூடிய விளைவு.

**இந்த டொலரின் வீழ்ச்சிப் போக்கு நிலை தொடருமா? அல்லது இதில் மாற்றம் ஏற்படுமா?**

இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் இதனைச் சொல்லக்கூடியதாக இருக்கும். இலங்கை தற்போது டொலரின் உள்வருகையினை தற்காலிகமாக அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. வெளிநாட்டிலிருந்து இலங்கையர்கள் அனுப்பும் பணமும் ஓரளவுக்கு அதிகரித்திருக்கின்றது. அதேபோல, உல்லாசப்பயணிகளின் வருகை காரணமாக டொலர் வருகை சற்று அதிகரித்திருக்கின்றது. இந்த இரண்டும் தொடருமாக இருந்தால் ஓரளவுக்கு டொலரின் வருகை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது.

**டொலர் வீழ்ச்சிக்கு சமாந்தரமாக தங்க நகைகளின் விலைகளும் குறைவடைந்திருக்கின்றது. நகைகளில் முதலீடு செய்வதற்கான காலமாக இதனைக் கருத முடியுமா?**

உலக சந்தையில் தங்கத்தின் விலையும் டொலரின் விலைக்கு ஏற்றவாறு அசைகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது, உலக சந்தையில் தங்கத்தின் விலையில் ஒரு தளம்பல் நிலை இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். அந்தத் தளம்பல் நிலை இலங்கையிலும் பிரதிபலிக்கின்றது. ஒருபுறம் இலங்கை

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# இலங்கை அரசியலில் இனவாத ஆன்மீகம்!

பா.அரியநேத்திரன்

இலங்கை அரசியலில் சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்கள் பௌத்தமத புத்தபிக்குகளின் இனவாத கருத்துக்களை உள்வாங்குவதால்தான் வடகிழக்குவாழ் தமிழ்பேசும் மக்களுக்கான நிரந்த அரசியல் தீர்வு எட்டாக்கனியானதற்கு மூலகாரணமாகும்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னமே 1920ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இலங்கை நாட்டில் பௌத் தமத மேலாதிக்கமும் சிங்கள மொழி திணிப்பும் புத்ததுறவிகளினால் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாகவே இலங்கை பிரித்தானியாவில் இருந்து 1948,பெப்ரவரி 4ம் திகதிக்குப்பின் 1972,1978 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புக்கள் எல்லாம் பௌத்தமதமும் சிங்கள மொழியும் முன்னுரிமை வழங்கப்பட்டது ஏனய மதங்களும் தமிழ்மொழியும் புறக்கணிக்கப்படும் நிலை எழுபத்தி நான்கு வருடங்களாக இலங்கை அரசியலில் எழுதப்படாத விதியாகஇன்றுவரை உள்ளது.



இலங்கையில் பௌத்தம், இந்து, கிறிஷ்தவம், இஷ்லாம் என நான்கு மதங்களை வழிபடும் மக்கள் உள்ள போதும் அரசியலில் தலையிடுகின்ற அல்லது அரசியல் தலைவர்களை வழிப்படுத்துகின்ற மதமாக பௌத்தமதமும் பௌத்த குருமார்களும் ஆதிக்கம் செலுத்தும் நிலை தொடர்வதை எவராலும் மாற்றமுடியவில்லை, இதன்விளைவுதான் 2009, மே,18, க்கு பின்னர் வடக்கு கிழக்கில் காடு மேடு மலைகள் எல்லாம் புத்த விகாரைகளும் புத்தர்சிலைகளும் திட்டமிட்டு இராணுவத்தினரின் உதவியுடன் நிறுவப்பட்டு வருகிறது. இதனை தடுக்க தமிழ்தேசிய அரசியல் கட்சிகளில் உள்ளவர்கள் கூடிய பிராயச்சித்தம் மேற்கொண்டாலும், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தாலும் அதனையும் மீறி தொடர்ந்தும் பௌத்தமயமாக்கல் தொடர்வதை காணலாம்.



கிறிஷ்தவமதத்தை பொறுத்தவரை அதன் குருமார் குறிப்பாக கத்தோலிக்க திருச்சபை அரசியலில் நேரடியான பங்களிப்புக்களை செலுத்தாதபோதும் இனப்பிரச்சினைக்கான நீதியான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்றும் சிறுபாண்மை மக்களுக்கான உரிமைக்காக குரல் கொடுத்த வரலாறுகள் உள்ளபோதும் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்ற போக்குஅவர்கள் கடைப்பிடிக்கவில்லை.

இஷ்லாம் மதத்தை பொறுத்தவரை அரசியல் விடயத்தில் மததலைவர்கள் மௌலவிகள் தமது மதம் சார்ந்த அரசியல் செயல்பாடுகளில் ஆரம்ப காலங்களில் ஆதிக்கம் செலுத்தவில்லை இஷ்லாமிய அரசியல் தலைவர்கள் தென் பகுதிகளில் சிங்கள தேசியக்கட்சிகளின் உறுப்பினர்களாகவும் வடகிழக்கு தாயகத்தில் இலங்கைதமிழரசுக்கட்சி,தமிழர் விடுதலை கூட்டணியுடன் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தனர் அதன் அடிப்படையில்தான் ஈழவிடுதலைப்போராட்டம் இளைஞர்களால் ஆயுதப்போராட்டமாக மாற்றம் பெற்றபோது பல இஷ்லாமிய இளைஞர்களும் ஆயுதம் ஏந்தி இலங்கை இராணுவத்திற்கு எதிராக போராடியதும் 46 மாவீரர்களானதும் மறக்க முடியாத உண்மை.

ஆனால் 1981ம் ஆண்டுக்குப் பின் முஷ்லிம்அரசியல் தலைவராக இருந்த மறைந்த அஷ்ரப் அவர்கள் ஶ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் என்ற அரசியல் கட்சியை உருவாக்கியபின்புதான் அந்த கட்சியில் முஷ்லிம் மத்தலைவரகளின் ஆசியும் வழிகாட்டல்களும் அந்த கட்சியூடாக இஷ்லாமிய மக்களுக்கான மதம் சார்ந்த அணுகுமுறை அரசியலில் செல்வாக்கை செலுத்தியது.

இந்து மதத்தை பொறுத்தவரை அரசியலில் நேரடியாக தலையிடாத ஒருமதமாகவே இலங்கையில் இதுவரை இந்துமதம் உள்ளது மததலைவர்கள் குருக்கள் எவருமே எந்த அரசியல் கட்சிகளுக்கும் ஆலோசனைவழங்குவதையோ அதிகாரம் செலுத்துவதையோ காணமுடியாது.



பௌத்தமத குருமார்கள் அதாவது புத்த பிக்குகள் அரசியலில் நேரடியாக தேர்தலில் போட்டியிட்டுபாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட வரலாறும் பௌத்த துறவிகளுக்கு உண்டு அவர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இனவாதகருத்துக்களையும் தமிழர் வரலாற்றை மாற்றிக்கூறும் படுமோசமான கருத்துக்களையே தொடர்ந்தும் பேசிவருவதை பார்க்கும்போது இவர்கள் ஆன்மீகவாதிகளா அல்லது இராணுவ தளபதிகளா என்ற எண்ணம் எமக்கு ஏற்படுகின்றது.

இலங்கையில் புரையோடிப்போய் உள்ள இனப்பிரச்சனைக்கான தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற மனோநிலையற்ற ஆன்மீகவாதிகளாக தொடர்ந்தும் பௌத்ததுறவிகள் உள்ளமை இந்த நாட்டுக்கு கிடைத்த துர் அதிஷ்டமாகும்.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் கடந்த 2015ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வுக்கான புதிய அரசியல் யாப்பு திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் கடந்த இரண்டு வருடங்களாக அதற்கான விஷேட குழுக்கள் உருவாக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அதன் நகல் அறிக்கை சமர்பிக்க இருந்தவேளை இலங்கையில் உள்ள நான்கு மகாநாயக்கா சங்கங்கள் ஒன்றுணைந்து புதிய அரசியல் யாப்பு திருத்தம் தேவையில்லை அதை நிறைவேற்ற விடமாட்டோம் என இனவாத்தீயை மீண்டும் கிழப்பியுள்ளனர் இதனால்தான் பாராளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பான விவாதம் இடம்பெறாமல் பிற்போடப்பட்டவரலாறும் நடந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும் மகாநாயகர்களுக்குபயந்து பின்வாங்கும் நிலையே உள்ளது அதுவும் அன்றி மகாநாயக்க துறவிகளுக்கு அவர் கூறிய பதில் இன்னும் புதிய அரசியல் யாப்பு தொடர்பாக முடிவுகள் எடுக்கவில்லை அப்படியொரு நிலைவருமானால்பௌத்ததுறவிகளின் ஆலோசனை பெற்றே அதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும் என பூசிமினுக்குயதும் இன்றி பௌத்ததுறவிகளுக்கு பூரண அதிகாரம் கொடுத்துள்ளமை அவரின் உரையில் நன்கு விளங்கியுள்ளது இதனால் இலங்கையில் பௌத்ததுறவிகளைமீறி ஒரு அணுவும் அசையாது என்பது தெளிவு,



தந்தை செல்வாகாலத்தில் 1957,யூலை 26ல் மேற்கொண்ட வண்டா செல்வா ஒப்பந்தம் கிளித்தெறியப்பட்டதற்கும் பௌத்த துறவிகளின் பின்னணி இருந்தது 1965ல் செய்யப்பட்டட்லி செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதற்கும் பௌத்தபுத்தபிக்குகளின் பின்னணி இருந்தது.

1959,ல் பிரதமராக இருந்த பண்டார நாயக்காவை சுட்டுக்கொன்ற கொலையாளியும் பௌத்த துறவிதான் பௌத்தமதம் தர்மத்தை போதித்தாலும் பௌத்த துறவிகளுக்கு மட்டும் அதர்மத்தை போதிக்கின்றதா என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது.



ஏனெனில் காவுப்போர்வை போர்த்த புத்த பிக்குவும் காணிபிடித்தல் சிங்கள குடியேற்றம் செய்தல் அடாவடிசண்டித்தனம் புரிதல் இனவாதகருத்துக்களை விதைத்தல் அரசியல் தலைவர்கள் அதிகாரிகளை அவமதித்தல் என அதர்மமான செயல்களை செய்வதும் அப்படியான துறவிகளை ஆட்சியாளர்கள் தண்டிக்காத பல சம்பவங்களும் இந்த நாட்டில் அரங்கேறியுள்ளது.

தமிழ்தேசிய அரசியல் தலைவர்கள் எப்படியும் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்பதற்காக இந்த பௌத்ததுறவிகளையும் மதித்துபல விட்டுக்கொடுப்புகளையும் செய்து வட கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வுகிடைக்கவேண்டும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்



# மட்டக்களப்பில் மீண்டும் உதயமானது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்

மட்டு.நகரான்

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மீண்டும் புத்துயிரளிக்கப்பட்டுள்ளது. கடந்த 19வருடமாக இயங்காத நிலையிலிருந்த கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் முன்னெடுத்துவருகின்றனர்.

தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஊடகங்களின் பங்களிப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது. தமிழர்கள் விடுதலைப்போராட்டத்தில் ஆயுதப் போராட்டமானாலும் இராஜதந்திர போராட்டமானாலும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் ஒரு கண்ணாக இருந்துவந்துள்ளார்கள்.

இன்று தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் தேசிய பரப்பில் பல கட்சிகள் பல வகையான செயற் பாடுகளை முன்னெடுத்துள்ளபோதிலும் அனைத்தையும் ஒருங்கிணைத்து தமிழ் தேசியபரப்பில் தமிழர்களின் நியாயத்தினை முன்னிறுத்துவதில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு என்பது இன்றைய காலகட்டத்திலும் மிக முக்கியத்துவம்வாய்ந்ததாக பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத ரீதியான செயற்பாடுகளினால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அழிவுகளும் துன்பங்களும் ஏராளமாகும். இவற்றினை அடையாளப்படுத்துவதிலும் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிக்கொணர்வதிலும் தமிழ் ஊடகவியலளார்க ளின் பங்களிப்பு என்பது அளப்பரியதாகயிருந்தது.

இதன்காரணமாகவே தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். படுகொலைசெய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்காக அவர்கள் பல்வேறு பட்டங்கள் வழங்கப்பட்டு இறுதிக்கௌரவிப்புகள் தேசிய தலைவரினால் வழங்கப்பட்டமை தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு ஆற்றிய பங்களிப்பை உறுதிப்படுத்தியிருக்கிறது.

வடகிழக்கு தமிழர்களின் தாயக விடுதலைக்கான போராட்டத்தில் வடகிழக்கிலுள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் அர்ப்பணிப்புடன் தமது பணிகளை முன்னெடுத்துவந்தனர்.அதிலும் கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்தினை மிக உறுதியாக நம்பியதன் காரணமாக தேசிய தலைவர் கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் மீது என்றும் தனிமதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். விடுதலைப்போராட்டத்தின் ஜனநாயக ரீதியாக கட்டமைப்பு நகர்வுகளில் ஊடகவியலாளர்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் நிலைமையானது அதிகளவிலிருந்துவந்தது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பது கிழக்கில் இருந்த தமிழ் தேசிய பரப்பில் உண்மை நிலைமையினை உணர்ந்த ஊடகவியலாளர்களைக்கொண்ட ஒரு அமைப்பாகயிருந்துவந்தது. இந்த சங்கமானது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட இரண்டாவது ஊடக சங்கமாக இருந்துவந்ததுடன் தமிழர்களின் விடுதலைப் போராட்ட காலத்தில் நடைபெற்ற பல விடயங்களை வெளிக்கொணர்ந்தவர்கள் இந்த சங்கத்தில் உறுப்பினர்களாகயிருந்தவர்களே. தராகி சிவராம், நடேசன்,துரைரெட்னம்,சண் தவராஜா, வேதநாயகம் உட்பட தமிழ் தேசிய தளத்தினை ஆதரித்து நின்ற பலர் இணைந்தே இந்த கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினை இயக்கி



வந்தார்கள்.

தமிழ் தேசிய விடுதலைப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக இடம்பெற்றுவந்த நிலையில் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத் தினை ஆதரிக்கும் வகையில் பல அரசியல் சக்திகள் பிரிந்துநின்று செயற்படுவது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினால் அவதானிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் தேசிய தலைவரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் இணைந்த அரசியல் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியத்தினை தேசிய தலைவருக்கு உணரவைத்தவர்கள் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினை சேர்ந்தவர்களாகும். அன்றைய காலப்பகுதியில் தராகி சிவராம் இதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்ட நிலையிலேயே வடகிழக்கு இணைந்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கம் என்பது பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் பல நோக்குகளைக்கொண்ட இயக்கங்கள்,கட்சிகளை ஒருங்கிணைத்து தமிழீழ தேசிய தலைவரின் தலைமையில் நடைபெற்றதற்கு முக்கிய மூலகர்த்தாவாகயிருந்தது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கமாகும்.அதன் பணிகள் என்பது தமிழ் தேசிய விடுதலைப்போராட்டத்தில் பாரியளவிலிருந்தது. அதன்காரணமாகவே அந்த சங்கத்தின்ஆணிவேர்களாயிருந்த தராகி சிவராம்,மாமனிதர் நடேசன் போன்றவர்கள் படுகொலைசெய்யப்பட்டார்கள்.

இந்த படுகொலையின் பின்னர் கிழக்கில் ஆயுதக்குழுக்கள் மூலம் கிழக்கு மாகாணத்தில் அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஊடகவியலாளர்கள்அச்சுறுத்தலுக்குள்ளானார்கள். அவர்களில் அச்சுறுத்தல்கள் காரணமாக புலம்பெயர்ந்து சென்ற நிலையில் கிழக்கில் தமிழ் ஊடகப்பரப்பில் பாரிய இடைவெளி நிலவியது. கிழக்கிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற ஊடகவியலாளர்கள் புலம்பெயர் நாடுகளிலிருந்து செயற்பட்டாலும் தளத்திலிருந்து செய்திகளை வழங்குவதற்கு பாரிய இடைவெளிகள் காணப்பட்டன.

எனினும் கிழக்கில் கருணாகுழு உட்பட பல ஒட்டுக்குழுக்களின் அச்சுறுத்தல்கள்,படையினர், புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் மத்தியிலும் பல தமிழ் ஊடகவியலாளர்கள் இன்று தமது ஊடக கடமைகளை முன்னெடுத்துவருகின்றனர். கிழக்கிலிருந்து தமிழ் ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டாலும்இன்றுஅவர்களின்இடத்தினை நிரப்புமளவுக்கு இன்று தமிழ் ஊடகவியலாளர்கள் தமது பணிகளை முன்னெடுத்துவருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் என்றைக்கும் தமிழ் ஊடகத்துறையானது தமிழ் தேசியத்தின் பால்தான் தனது செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளபோதிலும் இன்றைய காலத்தில் இலங்கை அரசாங்கமானது தனது புலனாய்வுக்கட்டமைப்புகள் ஊடாக கிழக்கில் தமிழ் ஊடகத்துறையினை பலமடைவதை தடுக்கும் வகையிலான செயற்பாடுகளையே முன்னெடுத்துவருகின்றது. சில தமிழ் ஊடகவியலாளர்களுக்கு பெருமளவு சம்பளம் வழங்கி விலைக்கு வாங்கப்பட்டு அவர்கள் ஊடாக ஊடக சங்கங்களை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் அதேநேரம் புதிய தமிழ் ஊடகங்கள் உருவாக்கப்பட்டு அதன் ஊடாக ஊடகவியலாளர்களாக புலனாய்வாளர்கள் களமிறக்கப்படடு ஊடக அமைப்புகளுக்குள் சொருகும் நிலைமையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஊடகவியலாளர்களை ஒருங்கிணைப்பதில் பல்வேறு வகையான பிரச்சினைகள் காணப்பட்டபோதிலும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்,மட்டு.ஊடக அமையம்,கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் போன்ற அமைப்புகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்கினை வகித்துவரும் நிலையில் அதற்கு எதிராக ஒட்டுக்குழுக்கள் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களைவிடுத்துவருவதுடன் முகநூல்கள் வாயிலாகவும் குறித்த ஊடக அமைப்பில் உள்ள முக்கிய ஊடகவியலாளர்களை இலக்குவைத்து பொய் பிரசாரங்களை முன்னெடுத்துவந்தன.

இவ்வாறான நிலையில் இதுவரையில் கிழக்கினை சேர்ந்த புலம்பெயர்ந்துசென்ற மூத்த ஊடகவியலாளர்களினால்கிழக்கில்தமிழ்மக்களின் உரிமைக்காக செயற்படும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்,மட்டு.ஊடக அமையம்,கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பனவற்றினை ஒருங்கிணைக்கும் வகையில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினை மீள இயங்கச்செய்யும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களின் படுகொலையின் பின்னர் மௌனித்துப் போன கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கமானது நடேசன் அவர்களின் 19 வது ஆண்டு நினைவு தினத்தில் மீள் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய பரப்பில் கிழக்கில் பயணிக்கும் அனைத்து ஊடகவியலாளர்களையும் ஒருங்கிணைத்து கொண்டுசெல்லும் நோக்குடன் சிரேஸ்ட ஊடகவியலாளரும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான இரா.துரைரெட்னத்தினால் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. காலத்தின் பணியாக தமிழ் ஊடகவியலாளர்களினால் இந்த கடமையினை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியத்திற்காக 30க்கும் மேற்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களது உயிர்களை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

கட்டுரை

# வரலாற்றுத் திரிபுகள்

துரைசாமி நடராஜா

ஒரு சமூகத்தின் வரலாறு என்பது மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். எனவே அச் சமூகம் வரலாற்றின் ஒவ்வொரு படியையும் மிகவும் அவதானமாக அடியெடுத்து வைக்க வேண்டிய தேவையுள்ளது. இந்த வகையில் மலையக சமூகத்தின் வரலாறு குறித்து நாம் நோக்குகையில் இச்சமூகத்தின் வரலாறு மிகவும் கசப்பானது என்பதனை மறுப்பதற்கில்லை. வரலாற்றின் பல நிலைகளிலும் தடைக்கற்கள் இருந்து வந்த நிலையில் இப்போதும் இருந்து வருகின்றன. இதனிடையே மலையகசமூகத்தின் 200 வருடகால வரலாற்றை நாடறியச் செய்யும் முயற்சியில் இலங்கை, கண்டி, சமூக அபிவிருத்தி நிறுவகம் இப்போது களமிறங்கி இருக்கின்றது. இது ஒரு சிறப்பம்சமாகும் என்பதோடு இம்மக்களின் வரலாறு முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும்.

மலையக சமூகம் இந்நாட்டில் 200 வருடகால வரலாற்றை கொண்ட சமூகமாக விளங்குகின்றது. இந்நிலையில் இச்சமூகத்தின் வரலாறு மற்றும் வாழ்க்கை செல்நெறிகள் மற்றும் அடைவுகள் தொடர்பில் பல்வேறு திருப்தியற்ற வெளிப்பாடுகள் இருந்து வருகின்றமை தெரிந்ததாகும். இதனிடையே இம்மக்களின் 200 வருட பயணப்பாதை மிகவும் இலகுவானதாக அமைந்துவிடவில்லை. கற்களும் முட்களும் நிறைந்ததாகவே அது காணப்படுகின்றது. இம்மக்களை ஓரங்கட்டி அவர்களின் உரிமைகளை மழுங்கடிக்கச் செய்யும் கைங்கரியங்கள் இவர்களின் வரலாற்றில் அடிக்கடி அரங்கேறி இருக்கின்றன. இனவாத சிந்தனையாளர்கள் பட்டியல் அடிப்படையில் இவ்வேலைத்திட்டத்தை உரிய காலத்தில் முறையாக முன்னெடுக்கும் நிலையில் ஆட்சியாளர்களின் ஒத்துழைப்பும் பல சந்தர்ப்பங்களில் கிடைத்துள்ளதாகவும் சமூக ஆர்வலர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

பிரித்தானியர்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றபோது நாம் அடிமை நிலையிலிருந்து விடுபட்டு விட்டோம் சுதேச சிந்தனையை விதைப்பதன் மூலம் உறுதியான தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கோஷங்கள் எல்லா திசைகளிலும் வலுப்பெற்று காணப்பட்டன. அன்றைய நாட்களிலேயே இலங்கையில் வளர்ந்து இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ள சமூகத்தை நாதியற்ற சமூகமாக , ஜனநாயக சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒரு சமூக கட்டமைப்பாக மிகக் கவனமாக உருவாக்கினர் என்பதனை புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1948 ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி இம்மக்களின் பிரசாவுரிமையையும் வாக்குரிமையை யும் பறித்தெடுத்த நிகழ்வு வரலாற்றில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது. அரசியல் சுயநலவாத சிந்தனையோடு ஐ.தே.க. மேற்கொண்ட இந்நடவடிக்கையானது மலையக மக்களின் எழுச்சியில் மிகப்பெரும் தாக்க விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. பிரசாவுரிமையின்றி அரசதுறை தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பம் கூட அனுப்ப முடியாத நிலையில் மலையக இளைஞர்கள் பின்தள்ளப்பட்ட நிகழ்வுகள் மிகவும் கொடுமையானதாகும். இதனால் அதிகபட்ச திறமை இருந்தும் பல இளைஞர்களின் அரசதுறை தொழில் வாய்ப்பு கனவு கை நழுவிப்போனது. இதே வேளை வாக்குரிமை இல்லாத நிலையில் பல அரசியல்வாதிகள் இம்மக்களை புறந்தள்ளியதோடு "மழைக்குக்கூடலயத்தில் ஒதுக்குவதற்கும் 'தயாராக இருக்கவில்லை. இம்மக்களுக்கான அரசியல் கதவுகள் மூடப்பட்டிருந்த நிலையில் அரசாங்கத்தின் மூலமான அபிவிருத்தி தடைப்பட்டது. பல்வேறுதுறைகளைப் பொறுத்த வரையிலும் பின்னடைவான குறிகாட்டிகளைக் கொண்டிருந்த இச்சமூகத்திற்கு அரசாங்க உதவி கிடைக்கப்பெறாமை ஒரு சாட்டையடியே ஆகும். இதனால் இம்மக்களின் முன்னோக்கிய நகர்வு மேலும் தாமதமடைந்த நிலையில் எழுச்சி கானல் நீரானது என்பதையும் கூறியாக வேண்டும்.

1956 ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் கனவுகளை மேலும் தகர்த்தெறிவதாக அமைந்தது. அரசதுறை தொழில் வாய்ப்புகளில் சிறுபான்மையினரின் சதவீதம் கணிசமாக வீழ்ச்சியடைவதற்கும் இது உந்துசக்தியாக அமைந்தது. குறிப்பாக நிர்வாக சேவை, எழுதுவினைஞர் சேவை, பொறியியலாளர்கள் மற்றும் வைத்தியர்கள், ஆயுதபடைச்சேவை என்பவற்றில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியடைவதற்கு தனிச் சிங்கள சட்டமே வலுசேர்த்தது என்றால் மிகையாகாது. உதாரணமாக 1956 இல் நிர்வாகத் துறையில் 30 வீதமாகக் காணப்பட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் 1965 இல் 20 வீதமாகவும், 1970 இல் 5 வீதமாகவும் வீழ்ச்சி கண்டது. இது போன்றே சகல துறைகளிலும் தமிழர்களின் பிரதிநிதித்துவ வீழ்ச்சி இடம்பெற்றது. அத்தோடு மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் சமூக அந்தஸ்தையும் தனிச்சிங்கள சட்டம் கேள்விக்குறியாக்கி இருந்தது.

## சனத்தொகை வீழ்ச்சி

இதேவேளை இலங்கையில் காலத்துக்கு காலம் சிறுபான்மையினருக்கெதிரான வன்செயல்கள் தலைதூக்கின. இதனடிப்படையில் 1956, 1958, 1960, 1981, 1983, 1986 போன்ற காலப்பகுதியில் தலைதூக்கிய வன்செயல்களால் இந்திய வம்சாவளி சமூகத்தினர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். உயிர் மற்றும் உடைமைச் சேதங்கள் அதிகளவில் காணப்பட்ட நிலையில் சிறுபான்மை மக்கள் வாழ்வதற்கு இலங்கை பொருத்தமற்ற நாடு என்ற ஒரு அபிப்பிராயமும் சர்வதேச ரீதியில் காணப்பட்டது. சிறுபான்மையினருக்கு எதிராக இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட பிழையான செயற்பாடுகள் இதனை நியாயப்படுத்தின. வன்செயல்களால் இந்திய வம்சாவளியினர் பலர் உள்ளூரில் வடபகுதிக்கும், இந்தியாவிற்கும் இடம்பெயர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனால் இந்திய வம்சாவளியினரின் செறிவு பல இடங்களில் குறைவடைந்ததோடு அவர்களின் பலமும் கேள்விக்குறியானது.

1948 ம் ஆண்டு அதிகாரம் கிடைக்கப்பெற்று இரண்டு வருடங்களுக்கு முன்னர்மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை கணிப்பீட்டில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் எண்ணிக்கை 11.8 (786,000) வீதமாகக் காணப்பட்டது. சிங்களவர்களுக்கு அடுத்த நிலையில் இரண்டாவது சிறுபான்மை இன மக்களாக இவர்கள் காணப்பட்டனர். இந்நிலை 1955 ம் ஆண்டு வரை நீடித்தது. 1955 ம் ஆண்டு மக்கள் தொகை கணிப்பீட்டில் இலங்கையின் மக்கள் தொகையில் 974,000 பேராகக் காணப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் மொத்த மக்கள் தொகையில் 12.0 வீதமாக இருந்தனர். இக்கணக்கெடுப்பில் வடக்கு கிழக்கு பிரதேசத்தை தாயகமாகக் கொண்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 10.9 வீதமாகவே காணப்பட்டனர். எனினும் 1955 காலப்பகுதியைத் தொடர்ந்து இலங்கையின் மக்கள் தொகையில் இந்திய வம்சாவளியினர் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. 2001 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 5.1 வீதமாக மூன்றாவது சிறுபான்மை இன மக்களாக தமது எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சியைக் கொண்டவர்களாக எடுத்துக்காட்டப்படுகின்றனர். இந்நிலைக்கு சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த அரசியல்வாதிகளின் தீர்மானமே காரணமாகும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தி இருக்கின்றமையும் நோக்கத்தக்கதாகும். ஒவ்வொரு இனமும் வளர்ச்சிப்போக்கை வெளிப்படுத்துகின்றபோது இந்திய வம்சாவளி மக்களின் வீழ்ச்சிப்போக்கு சகலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஒருசமூகத்தின் இருப்பையும் அடையாளத்தையும் சிதைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலச் சுவீகரிப்பும் இதில் ஒரு அம்சமாகும். இந்த வகையில் மலையக சமூகத்திற்கும் இது நடந்தேறியுள்ளது. பெருந்தோட்டக் காணிகள் அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரிக்கப்படுகின்ற நிலையில் இது இனவாதிகளின் மறைமுக இனவொடுக்கல் ஏற்பாடு என்ற விமர்சனங்களும் உள்ளன. ஒரு சமூகத்தின் கலாச்சார விழுமியங்கள் அச்சமூகத்தின் ஆணிவேரைப் போன்றதாகும். குறிப்பாக "நாட்டுப்புற பண்பாட்டியல் என்பது கிராமாந்திர மக்களின் அனுபவத்தின்பொக்கிஷம். மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டு மல்லாது இதயத்தோடு இதயத்தை பிணைத்து வைக்கின்றது. அவர்களுடைய தனித் தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கின்றது. இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளை அது பிரதிபலிக்கின்றது என்கிறார் பேராசிரியர் சங்கர் சென் குப்தா.

இந்த வகையில் இந்திய வம்சாவளி மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களும் முக்கியத்துவம் மிக்கவையாக விளங்குகின்றன. இம்மக்கள் இந்தியாவிலிருந்து இங்கு வந்தநிலையில் இவற்றை கைகழுவி விட்டு வரவில்லை. அவற்றையும் கூடவே எடுத்து வந்துள்ளனர் என்பது இனிப்பான செய்தியாகும். எனினும் இம்மக்களின் செறிவு குறையும் போதும், இடப்பெயர்வு நடவடிக்கைகளின்போதும் இம்மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு ஆபத்து வரக்கூடிய வாய்ப்புள்ளது. இந்த நிலையினை இந்திய வம்சாவளி சமூகத்தினரிடையேயும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் பின்வரும் சந்ததிகள் இவற்றை அறிந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுவதோடு இச்சமூகத்தின் அடையாளங்களும் பறிபோகின்றன. என்பதே உண்மையாகும்.

இது ஒரு புறமிருக்க வரலாறுகள் திரித்துக் கூறப்படுவது இப்போது வழக்கமாகியுள்ளதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கேற்ப ஒரு இனத்தின் பூர்வீக வரலாறு மூடிமறைக்கப்பட்டு பிறிதொரு இனம் மேலெழும்பும் வகையில் வரலாற்றுத் திரிபுகளுக்கு வித்திடப்படுவதாக விமர்சனங்கள் இருந்து வருகின்றன. இதன் பாதிப்பினை சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் நிலையில் மலையக மக்களும் இதற்கு விதிவிலக்காகிவிடவில்லை. இத்தகைய வரலாற்றுத் திரிபுகள் சமூக சட்டத்தில் பல்வேறு அதிர்வலைகள் ஏற்படுவதற்கும் இடமளித்துள்ளதனை மறுப்பதற்கில்லை.

ஒரு சமூகத்தின் வரலாறு இன்னொரு சமூகத்திற்கு முன்னுதாரணமாக இருக்க

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழர் நிலப்பறிப்பும் கட்டமைப்பியல் இனவழிப்பும்

**தியாகு** பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

வட தமிழீழத்தின் முல்லைத் தீவு மாவட்டம் குருந்தூர் மலையுச்சியில் நீதிமன்றத் தீர்ப்பையும் தமிழ்மக்களின் எதிர்ப்பையும் மீறிக் கட்டப்படும் பௌத்த விகாரைக்கான வழிபாடுகள் தொடங்கி விட்டன. சிங்கள இராணுவத்தின் ஏற்பாட்டிலும்பாதுகாப்பிலும்பௌத்தபிக்குகளும் வெலிஓயாவில் வன்குடியேற்றம் செய்யப்பட்ட சிங்களர்களும் இந்த வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

தொல்லியல் திணைக்களத்தின் அகழ்வாய்வுப் பணிகள் என்ற பெயரில்தான் குருந்தூர் பௌத்த விகாரைக் கட்டுமானம் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. இது வெறும் நிலப்பறிப்பு மட்டுமல்ல, சிங்கள பௌத்த மயமாக்கமும் ஆகும் என்பதைக் குருந்தூர் மலையுச்சியில் நின்று கூவிச் சொல்லலாம்.



தொல்லியல் திணைக்களம் புத்த பிக்குகளின் கட்டுப்பாட்டில் அவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு செயல்படுகிறது என்பதை அதிபர் இரணிலே ஏற்றுக் கொண்டுள்ளார்.

அரசுத் தலைவராக இருந்த கோத்தபாய இராசபட்சர் கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் ஆய்வுக்கென்று ஒரு குழு அமைத்தார். அந்தக் குழுவில் தமிழர் யாருமில்லை, இராணுவத்தினரும் பிக்குகளும் மட்டுமே இடம்பெற்றனர். அவர்கள், மட்டக்களப்பு குசலனமலை குமரன் கோயில் முன்பு பௌத்தர்களின் வழிபாட்டு இடமாக இருந்தது என நிறுவ முயன்றார்கள். இதுதவிர பௌத்த சமயத் தடங்கள் என்ற பெயரிலும் தொல்லியல் திணைக்களத்தின் சார்பில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிலப்பறிப்புக்கு சிங்கள அரசு சூட்டியுள்ள இன்னொரு பெயர் வனப் பாதுகாப்பு. மட்டக்களப்பு தமிழ் விவசாயிகளின் நிலங்களில், இலங்கை வனத்துறையினர் திடீரென எல்லைக் கற்களைக் கொண்டு வந்து நட்டு, இவை எல்லாம் வனப்பகுதிகள் என அறிவிப்பு செய்தனர். இந்த இடங்களை விட்டுத் தமிழர்கள் வெளியேற வேண்டும் என மிரட்டுகின்றனர்கள்.

இராசபட்ச குடும்பத்துக்கு நெருக்கமான குழுமங்கள் கட்டுமானப் பணிகளுக்காக மணல் அள்ளுவதும், நிலப்பறிப்புச் செய்வதும் தொடர்கின்றன. காலங்காலமாக உழுது பயிரிட்டு வந்த நிலங்களிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப் படுகின்றார்கள்.

பெரிய எந்திரங்களைக் கொண்டு மணல் அள்ளுவதால் அருகில் உள்ள தமிழர்களின் விளைநிலங்களில் பயிர்கள் அழிவதைப் பற்றி இந்தக் குழுமங்கள் கவலைப்படுவது இல்லை; தமிழர்களின் எதிர்ப்புகளைக் கண்டு கொள்வது இல்லை. மணல் அள்ள விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அவர்கள் மதிப்பதே இல்லை எனக் கிழக்கு மாகாணத்தின் சிங்கள ஆளுநர் அனுராதா எகம்பத் கவலை தெரிவித்தார்.

கொக்கிளாயில் அரசுக்குச் சொந்தமான கனிமக் குழுமம் இல்மனைட்டு சுரங்கம் அமைக்கும் முயற்சிகளை எதிர்த்து தமிழர்கள் போராடினார்கள். இது நிலப்பறிப்புக்கு எதிரான போராட்டம் மட்டுமன்று, சுற்றுச்சூழல் காப்புக்கான போராட்டமும் ஆகும்.

கோத்தபாய அதிபரான பிறகு தீவிர மடைந்த தமிழர் நிலப்பறிப்பு இன்றளவும் பல்வேறு பெயர்களில் தொடர்கிறது. நிலம் மற்றும் பாசன மேலாண்மைக்கான மகாவலி ஆணையம், தமிழர்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களில் சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வந்து குடியமர்த்தி இருக்கின்றது. இதை எதிர்த்தே மயிலத்தமடு பகுதி வாழ் தமிழ் விவசாயிகளின் போராட்டம் மாதக்கணக்கில் நடைபெற்றது.

இப்போதைய அதிபர் இரணில் விக்கிரமசிங்கா தமிழர்களின் அரசியல் தலைவர்களைச் சந்திக்கும் போது புதிய நிலக் கையகப்படுத்தலும் பௌத்த விகாரைக் கட்டுமானமும் இனி நிகழாது என்று வாய்மொழியாக வாக்களித்த போதிலும், எந்த மாற்றமும் இல்லை. அதிபரின் ஆணையை இராணுவமும் பௌத்த பிக்குகளும் மதிப்பதில்லையா? அல்லது இரணில் நாடகமாடுகின்றாரா? எது எப்படியானாலும் தமிழர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்படுகின்றார்கள்.

பௌத்தமயத்தோடு இணைந்த இராணுவ மயமும் தொடர்கிறது. போர் முடிந்து விட்ட பிறகும் இராணுவ நோக்கங்களுக்கான நிலப்பறிப்பு தொடர்கிறது. சிறிலங்கா கடற்படையின் புதிய பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட இருப்பதாக ஊர்க்காவற்றுறையில் கரம்பன் மேற்குப் பகுதி ஊர்களில் அறிவிப்புத் தரப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமுக்கான காணி அளவிடும் நடவடிக்கை புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட போது பொது மக்களால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. மக்களின் இந்தப் போராட்டத்தில் முன்னணியில் இருந்தவர் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன்.

இத்துணைப் பாரிய பொருளியல் நெருக்கடிக்கிடையில் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் 10.35 விழுக்காடு படைத்துறைச் செலவுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற அவையிலேயே சிங்கள ஆட்சியாளர்களைப் பார்த்துக் கேட்ட வினா இது: “போர் நடக்காத சூழலில் 10.35 விழுக்காடு செலவு ஏன்?”

அவர் சொல்கிறார்: “எந்த நாடும்SIRIL-ANKAAVAITYH சிறிலங்காவைத் தாக்கிடவில்லை. உங்கள் பகை உள்ளுக்குள்ளேதான். உங்கள் நாட்டுக் குடிமக்களையே பகைவர்களாகக் கருதுகின்றீர்கள். ஏன் என்றால், நீங்கள் அவர்தம் உரிமைகளை அறிந்தேற்க விரும்பவில்லை. அவர்களின் உரிமைகளை மறுப்பதற்காக அவர்களைக் கொல்லவும் தயங்க மாட்டீர்கள். உங்கள் பாதுகாப்புக் கொள்கைக்கும் உங்கள் அயலுறவுக் கொள்கைக்கும் அடிப்படையே தமிழர்கள் உரிமை பெறாமல் தடுப்பதுதான்.”

வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை - தையிட்டிப் பகுதியில் பொதுமக்களிடமிருந்து இராணுவம் கைப்பற்றிய நிலங்களில் பாரிய விகாரை அமைக்கப்பட்டதற்கு எதிராகத் தமிழ் மக்கள் கொதித்தெழுந்து போராடி வருகின்றனர். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளது. அவ்வியக்கத்தின் தலைவரும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினருமான ஐங்கரநேசன் “இது அரசாங்கத்தின் திட்டமிட்ட நிகழ்நிரலாக முன்னெடுக்கப்படுகின்றது, இது கட்டமைப்பியல் இனவழிப்பே தவிர வேறல்ல” என்று கூறியுள்ளார்.

சிங்கள மக்கள் வாழாத ஒரு பகுதியில் வலிந்து பௌத்த விகாரை அமைப்பது தமிழர்கள் மீதான ஒரு பண்பாட்டு ஆக்கிரமிப்பே ஆகும். இராணுவத்தினர் விரும்பினால் தமது பாசறைக்குள் புத்தர் சிலை வைத்து வழிபடத் தடையில்லை என்றும் தமிழ் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரையை அகற்றக் கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தலைவர்களோடு பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இந்தப் பின்னணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீது நடந்துள்ள தாக்குதல் முயற்சியைத் தமிழர் தரப்பில் அனை வரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் சிக்கலை எழுப்ப விடாமல் அவரைத் தடுக்கவும் முயற்சி நடந்துள்ளது.

இத்தனைக்கும் நடுவில் இந்திய அரசு வாய்திறக்கவே இல்லை. எப்போதாவது வாய் திறந்தாலும் 13ஆம் திருத்தம் என்ற உதவாக்கரைப் பேச்சுதான்! 13ஆம் திருத்தம் நிலப்பறிப்பையோ சிங்கள பௌத்தமயத்தையோ இராணுவமயத்தையோ தடுக்கப் போவதில்லை என்பது இந்திய வல்லரசுக்கு நன்றாகவே தெரியும்.

ஒருவேளைசிறிலங்காவில்முசுலிம்களுக்கு எதிராகச் சிங்களம் பரப்பி வரும் இசுலாமிய வெறுப்பு நரேந்திர மோதியுடன் ஒரு பொதுவான அலைவரிசை காணக் கூடும். பொறுத்திருந்து பார்ப்போம் என்று சொல்ல முடியவில்லை. பொங்கி எழுந்து போராடுவோம் தமிழர்களே!

• • •

# ஐக்கிய நாடுகள் சபையுடனான ஈழத்தமிழர் தொடர்புகளை அனைத்துலக நாட்களையும் வாரங்களையும் பயன்படுத்தி வலுப்படுத்த வேண்டும்

ஆய்வாளர் **பற்றிமாகரன்**

இன்று என்றுமில்லாத அளவுக்குப் பலநிலைகளில் ஈழத்தமிழர்களின் உயிரும் உடைமைகளும் நாளாந்த வாழ்வும் ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய நிலை ஈழத்தமிழர்களுடைய தாயகத்தில் வலுப்பெற்று வருகிறது. இந்நேரத்தில் ஈழத்தமிழர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நாட்களையும் வாரங்களையும் வருடத்தையும் அதன் மையக்கருத்துக்களுடன் இணைந்து கொண்டாடுவதன் மூலம் மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பாடல்களையும் உரையாடல்களையும் இலகுவாக்குவதுடன் சமகாலத்துக்கு ஏற்றவகையில் சமூக பொருளாதார அரசியல் அறிவினையும் வளர்ச்சிகளையும் ஈழத்தமிழ் மக்கள் பெற்றிடவும் உதவும்.

இதனை மையமாக வைத்து 01.06.2023 வியாழக்கிழமை முதல் 08.06. 2023 வியாழக்கிழமை வரை இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நாட்களை எவ்வாறு ஈழத்தமிழர் பயன்படுத்தலாம் என எடுத்து நோக்குவது இக் கட்டுரையின் இலக்காகவுள்ளது.

01.06. 2023 அன்று உலகப் பெற்றோர் நாளுடன் யூன் மாதத்திற்கான ஐக்கிய நாடுகள் சபை அனைத்துலக நாட்கள் ஆரம்பமாயின. பெற்றோர்கள் என்ற ஒவ்வொரு மனிதனினதும் வாழ்வின் ஊற்றுக்கள் என்ற அடிப்படையில் இவ்வுலக நாள் கட்டமைக்கப்பட்டுள்ளது. “மகிழ்ச்சியாக உடல்நலத்துடன் நம்பிக்கையுள்ளவராக வாழும் சிறுவர்களை உருவாக்குவதே பெற்றோர் என்ற சக்தியே” என்பது 2023ம் ஆண்டுக்கான உலக பெற்றோர் நாளின் மையக்கருவாக உள்ளது. 1992 முதல் பெற்றோரைப் பாராட்டவும் அவர்களின் கடமைகளை உணர்த்தவும் அவற்றை பெற்றோர் செவ்வனே செய்வதற்கு அரசாங்கம் உரிய சட்டங்களையும் நிதியளிப்புக்களையும் அளித்து சிறந்த குடிமக்களாக இளையவர் எழுச்சியுற உதவ வேண்டும் எனபதை வலியுறுத்தி இவ்வுலகநாள் யூன் 1ம்நாளில் கட்டமைக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சிறப்பான முறையில் வளர்த்து உருவாக்குவதற்குச் சிங்கள அரசாங்கங்கள் பலவழிகளில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. போதைப்பழக்கத்தையும் பாலியல் துஸ்பிரயோகங்களையும் சிறிலங்காப் படையினரே திட்டமிட்ட முறையில் ஏற்படுத்தி வருகின்றன என்பது இன்றைய ஈழத்தமிழ்ப் பெற்றோரின் கவலையாக மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்கள் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தும் அமைப்புக்கள் பலவற்றின் கவலையாகவும் உள்ளது. எனவே அனைத்துலகப் பெற்றோர் நாளில் உலகநாடுகளும் உலக அமைப்புக்களும் ஈழத்தமிழ்ப்பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தகுந்த பாதுகாப்புக்களையும் சுதந்திரமான வளர்ச்சியையும் ஏற்படுத்த உதவ வேண்டும் என உலகத் தமிழர்கள் உலகை வலியுறுத்த வேண்டும்.

யூன் 3ம் நாள் உலக ஈருளி நாள் World Bicycle Day உடல் உள நலத்திற்கும் பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்களின் நாளாந்த வாழ்வின் உயர்ச்சிக்கும் பைசைக்கிளின் பயன் பாட்டை ஊக்குவிக்கும் முகமாகக் கொண் டாடப்பட்டது. தாயகத்தில் இன்னமும் ஈருளி வாங்க இயலாத வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள மக்கள் பலர் உள்ளனர். இந்நாளில் உலகத் தமிழர்கள் மனித வாழ்வுக்கு அடிப்படையில் உதவுகிற ஈருருளியை தேவைப்படுபவர்கள் வாங்கிப் பயன்படுத்த உதவும் திட்டங்களை அத்துடன் ஈருறய உருவாக்கிச் செயற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் வழி பலருக்கு கல்வி மற்றும் தொழில் வளர்ச்சிகளையும் சமுக ஊடாடல்களையும் தாமாகவே ஏற்படுத்தவும் உதவி தனிமை உணர்வில் இருந்து விடுபட்டுச் சமுகமாக மகிழ்ந்து வாதழ இது உதவும்.



யூன் 4ம்நாள் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகியுள்ள அப்பாவிச் சிறுவர்களுக்கான நாளை ஐக்கிய நாடுகள் சபை கொண்டாடியது. ஆண்டொன்றுக்கு ஒரு ஆண்டுக்கு 10500 சிறுவர்கள் வீதம் 2014 முதல் 2020க்கு இடையில் 104100 (ஒரு இலட்சத்து நாலாயிரத்து நூறு) சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது உடல் உறுப்புக்களை இழந்து வாழ்கின்றனர். 25700 சிறுவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் 14200 சிறுவர்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். 14900 சிறுவர்களுக்கு மனிதாய உதவிகள் மறுக்கப்பட்டுள்ளன. 13900 சிறுவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டுள்ளது. என்ற புள்ளிவிபரத்தையும் ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ளது. எங்கள் ஈழத் தாயகத்திலும் எமது சிறுவர்கள் பல்லாயிரக் கணக்கானோர் சிறிலங்காவின் ஆக்கிரமிப்பால் கொல்லப்பட்ட அல்லது உடல் உறுப்புக்களை இழந்த வரலாற்றையும் மேற் குறித்த மற்றைய நிலைகளிலும் துன்புறும் வாழ்வையும் நாமறிவோம். எனவே ஒவ்வொரு மனிதனுக்கும் சிறுவர்களை எல்லாவிதமான ஆக்கிரமிப்புக்களிலும் இருந்து விடுவிக்கும் உரிமையும் கடமையும் உண்டு என்பதை மனதிருத்திக் கொண்டு

மறுநாள் யூன் 5ம் நாள் அனைத்துலகச் சூழல் சுற்றாடல் நாளை ஐக்கியநாடுகள் சபை கொண்டாடி ஒவ்வொரு ஆண்டும் 400 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் பொருட்கள் பயன்பாட்டுக்கு வருகின்ற பொழுதம் 10வீதமானவையே மறு உற்பத்திக்கு உள்ளாக்ப்படுகின்றன எனவும் மிகுதியான 2200 ஈவிள் கோபுரம் அளவு நிறையுள்ள 19 முதல் 20 மில்லியன் தொன் நிறையுள்ள பிளாஸ்திரிக் பொருட்கள் ஆறுகளிலும் குளம் குட்டைகளிலும் நதிகளிலும் கடலிலும் கொட்டப்படுகின்றன. அதிலும் 11 மில்லியன் டொன் பிளாஸ்திரிக் பொருட்கள் கடலில் கொட்டப்பட்டு வருகின்றன என்றும் 2040இல் இத்தொகை 3 மடங்காக அதிகரிக்கும் எனவும் ஒவ்வொரு மனிதனும் ஆண்டொன்றுக்கு 50000 பிளாஸ்திரிக் பொதிகளைப் பெற்று வருகின்றனர் எனவும் இத்துடன் நுண்பிளாஸ்திரிக் துணிக்கைகள் மனித உணவிலும் குடிநீரிலும் சுவாசக் காற்றிலும் கலந்து வருகின்றன எனவும் பிளாஸ்திரிக் பயன்பாட்டின் விளைவுகள் குறித்த உண்மைகளை உரக்கச் சொல்லி இந்தப் பிளாஸ்திரிக் பிரச்சினைக்கு அதன் பயன்பாட்டை இயற்கைப் பொருட்களால் மாற்றீடு செய்தும் பிளாஸ்திரிக் கழிவுகளை மறுஉற்பத்திக்குள்ளாக்கியும் உலகையும் மனிதர்களையும் காப்பதற்கான தீர்வு காணும் பொறுப்பை ஒவ்வொரு மனிதனிடமும் ஒப்படைத்துள்ளது. எங்கள் மாணவர்கள் இடமே நிறைய நல்லாக்கப் படைப்பாக்கச் சிந்தனைகள் உள்ளன. உதாரணமாக தருண் சிறிரங்கள் என்னும் ஆசிரியை முனைவர் நீற்றா பற்றிமாகரனிடம் உயர்தரத் தமிழ் கற்கும் மாணவன் இவ்வாண்டு அனைத்துலகச் சூழல் சுற்றாடல் நாளில் அனைத்துலக மறு உற்பத்தி நாள் (World Recycling Day) கொண்டாடப்பட வேண்டும் என்ற தனது சொந்த எண்ணத்தை முன்வைத்தார். இவரைப் போல ஆயிரக்கணக்கான தமிழ் இளையோர் படைப்பாக்கங்களும் கண்டுபிடிப்புக்களும் இன்றைய சுழல் சுற்றாடல் பாதுகாப்பின் வளர்ச்சிக்கு வழிகாட்ட வல்லனவாக உள்ளன.

மேலும் இலங்கைக் கடற்கரைகளில் எட்டு நாடுகளில் கொட்டப்படும் கழிவுப் பொருட் கள் கரைஒதுங்குகின்றன என்ற நிலையில் தாயகத்தில் ஈழத்தமிழர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறைகாட்ட வேண்டியவர்களாக உள்ளனர்;. அதே வேளை சிறிலங்கா திட்டமிட்ட முறையில் தமிழர் தாயகங்களின் இயற்கையான சூழல் பாதுகாப்பு முறைகளை அழித்து வருவது குறித்தும் நாம் உலகின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டியவர்களாக உள்ளோம்.

1956 யூன் 5ம்நாள் எஸ் டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்கா தலைமையிலான இலங்கை அரசால் சிங்களம் அரசகருமமொழி என்கின்ற சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது கொல்வின் ஆர் டி சில்வா இருமொழி ஒருநாடு -ஒரு மொழி இருநாடு என்கிற நிலை உருவாகும் என இலங்கைப் பாராளுமன்றத்தில் எச்சரிப்பும் செய்தார். 1944ம் ஆண்டிலேயே ரணிலின்உறவினரான ஜே ஆர் ஜயவர்த்தனா ஐக்கிய தேசியக்கட்சியின் களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் சட்டத்தை முன்மொழிந்திருந்தார். இந்தச் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகத் தமிழரசுக்கட்சியினர் காலிமுகத் திடலில் செய்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை அரச படைகளின் ஆதரவுடன் கூடிய சிங்களக் காடையர்களைக் கொண்டு வன்முறைப்படுத்தி சிங்கள அரசாங்கம் அரசபயங்கரவாதத்தைத் தமிழ் மக்கள் மேல் தொடங்கியதும் கல்லோயாவில் வாழ்ந்து கொண்டிருந்ததமிழர்களையும்வவனியாவில்புகை வண்டியில் பயணித்த தமிழர்களையும் இனஅழிப்பு நோக்கில் தாக்கி இனஅழிப்புப் பயணத்தைத் தொடங்கியது. இன்று ரணில் அதே பாணியில் சிங்கள பொலிசாரைக் கொண்டு தமிழ்த்தேசிய முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கஜேந்திரக்குமார் பொன்னம்பலத்தைக் கொலைசெய்ய முயன்றும் தப்பிய நிலையில் கைதாக்கி வழக்குப் பதிந்தும் பாராளுமன்ற சிறப்புரிமை கூடத் தமிழ்ப்பிரதிநிதிகளுக்கு இல்லை என்னும் அளவுக்கு 67 ஆண்டுகள் அரசபயங்கரவாதமும் இனஅழிப்பும் தொடர்கிறது. இவை குறித்த உங்கள் எண்ணங்களையும் கூடவே யூன் 5 1975இல் வீரச்சாவைத் தழுவிய தியாகி சிவகுமாரன் அவர்கள் மாணவர்கள் அரசியல் விழிப்புணர்வு உள்ளவர்களாகச் செயற்பட வேண்டுமென விடுத்த அழைப்பின் பின்னணியில் ஈழத்தமிழ் மாணவர் எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அமெரிக்காவை விட்டுவிலகி சீனாவை அரவணைக்கும் மத்திய கிழக்கு நாடுகள்



தமிழில்: ஜெயந்திரன்

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செல்வாக்கு அண்மைக்காலமாகக் தேய்வடைந்து கொண்டு வருகிறது. இவ்வாறான ஒரு பின்புலத்தில் மத்திய கிழக்கில் தாம் பிரயோகித்து வந்த செல்வாக்கைப் பாதுகாப்பதற்காக, அமெரிக்காவின் இராஜீக செயலர் அன்ரனி பிளிங்கன் *(Antony Blinken)*, மூன்று நாள் பயணத்தில் இவ்வாரம் சவூதி அரேபியாவுக்குச் செல்கிறார். அமெரிக்காவுக்கும், சவுதி மற்றும் வளைகுடாவைச் சேர்ந்த நாடுகளுக்கும் இடையே மூலோபாய ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா தற்போது எடுக்கும் முயற்சி அவ்வளவு இலகுவானதாக அமையப்போவதில்லை.

"சீனா, ரஷ்யா அல்லது ஈரான் போன்ற நாடுகளால் நிரப்பப்படக்கூடிய ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டு வெளியேறுவதற்கு நாம் தயாரில்லை" என்று கடந்த வருடம் ஜூலை மாதம், சவூதி அரேபியாவில் நடைபெற்ற வளைகுடா நாடுகளின் கூட்டுறவுச் சம்மேளன ஒன்றுகூடலில் கலந்துகொண்ட அதிபர், ஜோ பைடன் *(Joe Biden)* கூறியிருந்தார். ஆனால் அண்மைக்காலமாக அங்கு நிகழ்ந்து வருவனவற்றை அவதானிக்கும் போது, உண்மையில் அவ்வாறான ஒரு விடயம் தான் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அமெரிக்கா தனது எதிர்ப்பைப் பதிவு செய்த போதிலும் கூட, கடந்த வருடத்தில் இந்தப் பிரதேசத்தில் உள்ள நட்பு நாடுகள் ஒரு கலப்பு அணுகுமுறையைக் கையாண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பேஜிங் மற்றும் தெஹ்றான் ஆகியவற்றுடன் தமது உறவை இந்த நாடுகள் மேம்படுத்தியதுடன் மொஸ்கோவுடன் அவை மிகப் பலமான உறவையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இராஜீக உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள, சீனாவின் முயற்சியின் பயனாக சவூதிக்கும் ஈரானுக்கும் இடையே முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை பைடன் நிர்வாகம் குறைவாக மதிப்பிட்ட பொழுதிலும், எண்ணெய் வளம் மிகுதியாகக் காணப்படும் வளைகுடாப் பிரதேசத்திலும் மத்திய கிழக்கிலும் மிக விரைவாக அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்குத் தொடர்பாக அது அதிக கவலையும் குழப்பமும் அடைந்திருக்கிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக, தனது எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை கணிசமான அளவு அதிகரித்த அமெரிக்கா, சக்தியை வழங்குவதில் கிட்டத்தட்ட தன்னிறைவு நிலையை எட்டிவிட்டது என்றாலும் அங்கு ஒரு போர் மூளும் பட்சத்தில் இந்த முக்கிய சக்தி விநியோகத்திலிருந்து சீனாவைப் பிரித்து, தனது நட்பு நாடுகளுக்கு அவை கிடைப்பதை உறுதி செய்வதற்காக இப்பிரதேசத்தை அது தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே விரும்புகிறது.

கடந்த மாதம் பிளிங்கன் எச்சரிக்கை விடுத்தது போல, "சுதந்திரமான, திறந்த, பாதுகாப்பான ஒரு பன்னாட்டு ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்ற எமது இலட்சியத்துக்கு சவாலாக அமையக்கூடிய நோக்கத்தையும் வல்லமையையும் சீனா தற்போது தன்னகத்தே கொண்டிருப்பதால் பூகோளரீதியாக சீனாவையே மிகப்பெரும் சவாலாக தற்போது நாங்கள் கருதுகிறோம்."

ஆனால் உண்மையில் வோஷிங்டனின் சனநாயகத்தை விட, சீனாவின் சர்வாதிகார அணுகுமுறை அப்பிரதேசத்தின் சர்வாதிகாரிகளுக்கு இலகுவானதாகவும் சிறந்ததாகவும் இருக்கும்.

அதுமட்டுமன்றி, மத்திய கிழக்கிலும் அதற்கு அப்பாலும், ரஷ்யா பெற்றுவரும் செல்வாக்கும் அமெரிக்காவைப் பதற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்த நாடுகளின் இரட்டைத் தன்மை தொடர்பாகவும், ரஷ்யாவுடன் அவை இணைந்து செயற்படுவதன் காரணத்தாலும், பைடன் நிர்வாகம் மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றின் மீது அதீத அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதுடன், இந்த நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக தான் பொறுமை இழந்து வருவதாகவும் தெரிவித்திருக்கின்றது. பொருண்மியத் தடைகளை ரஷ்யா தவிர்த்து வருவது தொடர்பாக அந்த நாடுகளை எச்சரிக்கை செய்து வரும் அதே வேளை, அவை தாம் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக விரைவாக ஒரு முடிவை எடுக்க வேண்டும் எனச் சொல்லியிருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் அமெரிக்கா மற்றும் ஜி7 நாடுகளின் சீற்றத்துக்கு அவை உள்ளாக வேண்டிவரும் எனவும் எச்சரித்திருக்கிறது.

இவ்வாறான எந்த எச்சரிக்கையும் இதுவரை பயனளித்தாகத் தெரியவில்லை.

ரஷ்யாவின் மீது மேற்கு நாடுகள் விதித்த பொருண்மியத் தடைகளை ஈடுசெய்வதற்காக, எண்ணெய்ச் சந்தையில் எண்ணெயின் விலையைக் குறைக்கும் நோக்குடன் எண்ணெய் உற்பத்தியை கணிசமான அளவு அதிகரிக்கும் படி, சவூதி அரேபியாவை அமெரிக்கா கேட்டுக்கொண்ட போது, சவூதி அதற்கு இணங்க மறுத்திருக்கிறது. மொஸ்கோவுடன் சுமூகமான உறவைப் பேணி வரும் அதே நேரம், அரைமனதுடன் யுக்ரேனுக்கும் அது ஆதரவை வழங்கிவருகிறது. சவுதியின் முடிக்குரிய இளவரசரான மொஹமட் பின் சல்மன் அமெரிக்கா தொடர்பாக வெளிப்படுத்தி வரும் அவமதிப்புச் செயற்பாடுகள் அப்பிரதேசத்தில் அவருக்கான ஆதரவை அதிகரித்திருக்கிறது.

"சவுதி தங்களை அவமதித்து வருவதற்காக றியாத்தை தாங்கள் தண்டிப்போம்" என்று பைடன் விடுத்த எச்சரிக்கைக்குப் பதிலடியாக, சவூதி அரேபியா இருதரப்பு உறவுகள் தொடர்பாகப் பேசுவதற்கும், சீன வளைகுடா ஒத்துழைப்பு ஆணையம், சீன – அரபு உச்சி மாநாடு போன்றவற்றில் பங்கெடுக்கவும் சீன அதிபரான சீ ஜின்பிங்கை தமது நாட்டுக்கு வரவேற்று உபசரித்தது. சீனாவின் மத்தியஸ்த்தத்தின் உதவியுடன் சவூதி அரேபியா ஈரானுடனான தனது உறவைப் புதுப்பித்தது மட்டுமன்றி, ஈரானுடனான தனது பொருண்மியத் தடைகளை மேற்குலகம் இறுக்கி வரும் நேரத்தில், அமெரிக்காவைச்சீண்டும் நோக்கில் சிரியாவுடனான தனது உறவையும் அது சீர்செய்தது.

அமெரிக்காவுடனான தங்களது உறவு தொடர்பாக இந்த நாடுகள் காண்பித்து வரும் புதிய மனப்பாங்கு, றியாத்தில் மட்டும் அவதானிக்கப் படவில்லை. இது அந்தப் பிரதேசத்தின் உண்மையான நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கிறது. அப்பிரதேசத்தில் உள்ள இன்னொரு நட்புநாடான ஐக்கிய அரபு இராச்சியம், சீனாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தியதுடன், பிரான்சு நாட்டுடனான தனது மூலோபாய உறவை மேம்படுத்தி, அதைத் தொடர்ந்து ஈரான், ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளுடனும் தொடர்புகளை மேற்கொண்டுவருகிறது. இவ்வாறான செயற்பாடுகள் அமெரிக்காவுடனான அவற்றின் உறவில் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது.

பூகோளரீதியான உறவுகளில் மத்திய கிழக்கு நாடுகள் தமது அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. முக்கியமாக இந்த நாடுகளின் வர்த்தக உறவுகளில் இது வெளிப்படையாகத் தெரிகிறது. 2000 ஆண்டுக்கும் 2021ம் ஆணடுக்கிடையில், மத்திய கிழக்குக்கும் சீனாவுக்கும் இடையேயான வர்த்தகம் 15.2 பில்லியன் டொலர்களிலிருந்து 284.3 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருக்கிறது. அதே காலப்பகுதியில், அமெரிக்காவுடனான வர்த்தகம் சிறிதளவே அதாவது 63.4 பில்லியன் டொலர்களிலிருந்து 98.4 பில்லியன் டொலர்களாக உயர்ந்திருக்கிறது.

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், எகிப்து உள்ளிட்ட ஆறு மத்திய கிழக்கு நாடுகள் சீனா தலைமை தாங்கும் பிரிக்ஸ் *(BRICS)* குழுவினுள் தம்மை இணைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. இந்தக் குழுவில் ரஷ்யா, இந்தியா, பிரேசில், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளும் அங்கம் வகிப்பது கவனிக்கத்தக்கது. மேற்குலகம் ரஷ்யா மீது தமது பொருண்மியத் தடைகளை அதிகரித்து வரும் நேரத்திலும் மத்திய கிழக்கு நாடுகள் இவ்வாறான நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றன.

மத்திய கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், கடந்த 30 வருடங்களாக பிரதானமான மூலோபாய சக்தியாக அமெரிக்காவே இது வரை இருந்துவருகிறது. இன்றும் அவ்வாறு தான் இருக்கிறது. ஆனால் அடுத்த முப்பது ஆண்டுகளும் இந்த நிலை தொடருமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

சர்வாதிகார அரசுகளுக்கும் மக்களுக்கும் இடையே அதிக புரிந்துணர்வு இல்லாத இந்தப் பிரதேசத்தில், அமெரிக்காவுக்கு இல்லை என்று சொல்வது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. வாயளவில் மனித உரிமைகளைப் பேசுகின்ற வெளிவேடத்தன்மை வாய்ந்த ஒரு ஏகாதிபத்திய சக்தியாகவே பலர் அமெரிக்காவைப் பார்க்கிறார்கள்.

பாலஸ்தீனம் தொடர்பாக அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை உற்றுநோக்கும் போது, அமெரிக்காவின் இவ்வாறான மனப் பாங்கு தெளிவாகத் தெரிகிறது. காரணம் பாலஸ்தீனத்தின் காலனீயவாதிகளாகவும் ஆக்கிரமிப்பாளர்களாகவும் விளங்குகின்ற இஸ்ரேலை அது நிபந்தனையற்ற விதமாக ஆதரித்து வருகிறது.

றியாத்துக்கு தற்போது தான்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

### ஐக்கிய நாடுகள்... தொடர்ச்சி ...

வருவதால் உலகெங்கும் உள்ள புலம்பெயர் ஈழத்தமிழர்களும் தங்கள் இளையோருக்கு மாணவ வயதிலேயே ஈழத்தமிழ் தேசிய மற்றும் வரலாற்று விழிப்பணர்வுள்ளவர்களாக வாழப்பழக்க வேண்டும்.

யூன் 6ம் நாள் உலக ரஸ்ய மொழி நாள் கொண்டாடப்பட்டது. ரஸ்யர்கள் தான் திருக்குறளை உலகின் தலைசிறந்த மெய்ப்பொருளியல்நூலாகவும்சிலப்பதிகாரத்தைஉலகின் குடிமக்கள் காப்பியமாகவும் உலகிற்கு அறிமுகம் செய்தவர்கள். கூடவே இலெமூரியாக் கண்டக் கொள்கையைத் தமது ஆய்வுகளால் வெளிப்படுத்தி உலகின் முதற்குடிகளாகத் தமிழர்களை இனங்காட்டியவர்கள். இந்நாளில் அவர்களின் மொழியின் சிறப்புக்களையும் எங்கள் மொழிக்கும் இரஸ்ய மொழிக்கும் இடையிலான உறவுகளையும் சிந்திக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறு உலகின் மற்றைய மொழிகளுக்கும் எங்கள் தமிழ்மொழிக்குமுள்ள உறவுகள் குறித்த பண்பாட்டுத் தொடர்புகள் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டும்.

அத்துடன் யூன் 7ம் நாள் அனைத்துலக உணவுப்பாதுகாப்பு நாளாகவும் உள்ளது. 42000 பேர் உலகில் ஒவ்வொரு ஆண்டும் உணவுப் பாதுகாப்பின்மையால் இறந்து வருகின்றனர். இதில் 40 வீதமான 125000 பேர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள். இந்நிலையில் உணவுப் பாதுகாப்பு குறித்த அறிவார்ந்த விழிப்புணர்வு வளர்க்கப்படுவது சமுதாய நலனுக்கு மிகத் தேவையாகவுள்ளது.

இந்த அனைத்துலக நாட்களின் தொடர்ச்சியாக 08.06.2023இல் உலக மாக்கடல் நாள் *World Ocean day* கொண்டாடப்படுகிறது. மாகடல்களே எமக்கான ஒட்சிசனில் 50 வீதத்தைத் தருகின்றன. 30வீதமாக காபன் டை ஒக்சைட்டை மாக்கடல்களே உறிஞ்சுகின்றன. 40 மில்லியன் மக்கள் மாக்கடல்களிலேயே பொருளாதாரவாழ்வைப் பெறுகின்றனர். 2050ம் ஆண்டளவில் உலகில் கடலில் உள்ள மீன்களை விடப் பிளாஸ்திரிக் பொருட்களினும் நுண்துணிக்கைகளதும் எண்ணிக்கை அதிகமாகவிருக்கும் என்னும் தகவலை ஐக்கிய நாடுகள் சபை உறுதி செய்துள்ளது. கடலில் உள்ள பிளாஸ்திரிக் பொருட்களை மீன்கள் உண்பதால் நுண்பிளாஸ்திரிக் துணிக்கைகள் மனிதர்கள் மீன் உணவுகளை உண்கின்ற பொழுது உடலுக்குள் சென்று உடல்நலத்திற்குப் பயங்கர தீங்குகளை விளைக்கும் என்ற எச்சரிப்பும் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் கடல்களின் தூய்மை பேணப்படுதல் என்பது இந்த 2023ம் ஆண்டில் "அதிஉச்சநடவடிக்கையாக" முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் உலக மாக்கடல்நாள் மையக்கருவாக உள்ளது.

அத்துடன் ஈழத்தமிழர்கள் இலங்கையின் இந்து மாக்கடலின் ஐந்தில் மூன்று பங்கு தங்கள் தயாகத்திலேயே உள்ளதால் இந்து மாக்கடலின் பாதுகாப்பும் அமைதியும ஈழத் தமிழரின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் முன் நிபந்தனையாக உள்ளது என்பதையும் இந்நாளில் உலகிற்கு உரக்கச் சொல்லி, இந்து மாக்கடல் குறித்த உலக செயற்திட்டங்களில் ஈழத் தமிழர்களின் பங்களிப்பையும் உலகம் பெறுக் கொள்ள வேண்டிதன் முக்கியத்துவத்தை அறிவார்ந்த நிலையில் உலகிற்கு எடுத்து விளக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களாக உள்ளனர். வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் சிறிலங்கா அரசை மகிழ்வித்து தங்கள் நலன்களை ஈழத்தமிழரின் இந்துமாக்கடல் பரப்பில் நிலைநிறுத்தும் நோக்கிலேயே சிறிலங்கா ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்தி வரும் இன அழிப்புக்களையும் இனத்துடைப்புக்களையும் பண்பாட்டு இனஅழிப்புக்களையும் ஆதரித்து உலகின் மூத்த குடிகளாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கைத் தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையிலான அவர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை ஏற்க மறுத்து அவர்களைச் சிறிலங்கா இந்த நாகரிக உலகின் முன்பாகவே அநாகரீகமான முறையில் இனஅழிப்பு செய்ய அனுமதிக்கிறது என்பதையும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் உலக அமைப்புக்களும் உலக மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துச் சொல்லி ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினை சிறுபான்மையினப் பிரச்சினையல்ல உலகால் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினை என்பதை இந்த உலக மாக்கடல் நாளில் வலியுறுத்த வேண்டும். இவ்வாறாக ஐக்கிய நாடுகள் சபையின் மற்றைய உலக நாட்களையும் ஈழத்தமிழர்கள் அணுகி உலகுக்கு தங்களின் உண்மைநிலைகளைத் தெளிவாக்க வேண்டும்.

• • •

### காட்டுத்தீயால்... தொடர்ச்சி ...

கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கனடாவில் இருந்து பல நூறு மைலகளுக்கு அப்பால் உள்ள அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் வொசிங்டன் நகரங்களிலும் புகை மூட்டம் காணப்படுகின்றது. கனடா முழுவதிலும் காற்று மாசுபடுதலுக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில்... தொடர்ச்சி ...

தியாகம் செய்திருக்கின்றார்கள். ஊடக ஜாம்பவானாக கருதப்படும் தராகி சிவராம் போன்றவர்கள் இந்த நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டும் என்பதற்காக தங்களது உயிர்களை தியாகம் செய்திருக்கின்றார்கள்.அந்த தியாகங்களை முன் கொண்டுசெல்லவேண்டியபாரியபொறுப்புஇன்று வடகிழக்கில் உள்ளதமிழ் ஊடகவியலாளர்களுக்கு உள்ளது.அதேபோன்று வடகிழக்கில் உள்ள ஊடகவியலாளர்களை பலப்படுத்தி அவர்களின் பணிகளை செய்வதற்கான உதவிகளை செய்ய வேண்டிய பொறுப்பு இன்று புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் தேசியவாதிகளுக்கும் உள்ளது.இவை அனைத்தும் காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்துசெயற்படவேண்டும் என்பது

### கஜேந்திரகுமார்... தொடர்ச்சி ...

விரோத மிரட்டல் மற்றும் துன்புறுத்தலுக்கு இந்த கைது நடவடிக்கை மற்றொரு உதாரணமாகும் என பதிவிட்டுள்ளார்.

### இலங்கை அரசிய... தொடர்ச்சி ...

என்பதற்காக பல முயற்சிகளை முள்ளிவாய்க்கால் போர் மௌனத்திற்கு பின்னர் மேற்கொண்டபோதும் ஆட்சியாளர்கள் தட்டிக்கழித்து ஏமாற்றும் வரலாறுகளே தொடர்கிறது.

அரசியல் தீர்வை இல்லாமல் செய்ய மீண்டும் நிம்மதியற்ற நாடாக இலங்கையை மாற்ற காவி உடைதரித்த புத்ததுறவிகள் கங்கணம் கட்டிநிற்பது மிகவும் வேதனையான செயலாகும். வடகிழக்குவாழ் தமிழர்களாகிய நாம் கடந்த கால அரசியல் வரலாறுகளையும் நிகழ்கால அரசியல் நிகழ்வுகளையும் சரிவர அறிந்து கொள்ள வேண்டும். தமிழீழத்திற்காக ஆயுதப் போராட்டம் நடாத்தி அதன்மூலமாக தீர்வை பெறும் நிலையில் உலக நாடுகள் சுமார் 22 நாடுகள் இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை செய்தும்நேரடியாக எமது விடுதலைப்போராட்டத்தைஅழித்தமையாலும் அந்த தீர்வு எமக்கு கிடைககவில்லை அதே நாடுகள் இன்று மௌனம் காப்பது வேதனையே.இன்னும் எத்தனை காலம் பொறுமை காக்கப்போகின்றோமா அல்லது அரசியல் தீர்வை தர மறுத்தால் உலக நாடுகள் இன்னும் எம்மை ஏமாற்றப்போகிறார்களா?

இலங்கை அரசியலில் இனவாத பௌத்த ஆன்மீகமும் செல்வாக்கு செலுத்தும் வரை வடக்கு கிழக்கில் நில அபகரிப்பும் திட்டமிட்ப குடியேற்றமும் தொடரத்தான் செய்யும் இதனை சர்வதேச நாடுகளே தடுக்கவேண்டும்.

• • •

### அமெரிக்காவின்... தொடர்ச்சி ...

குறைந்துள்ளது. ரஸ்யா மீதான பொருளாதார தடைகளை காரணம் காட்டி அமெரிக்கா தனது ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் லெயிட் ஒஸ்ரின் இரண்டு நாள் பயணமாக இந்த வாரம் இந்தியா வந்திருந்தார். கடந்த 2021 ஆம் ஆண்டுக்கு பின்னர் அவர் தற்போது பயணம் மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 5 வருடங்களுக்கு இந்தியாவுக்கான ஆயுத விநியோக உடன்பாட்டை மேற்கொள்வதே அவரின் பயணத்தின் நோக்கமாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அவர் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உட்பட பலரை சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

### ரஸ்யாவுக்கு ஆதர... தொடர்ச்சி...

உக்ரைன் மீதான ரஸ்யாவின் சிறப்பு படை நடவடிக்கைக்கு பின்னர் மேற்குலக நாடுகள் ரஸ்யாவின் ஊடகங்களை தடை செய்ததுடன், தமது ஊடகங்கள் மூலம் உக்ரைனுக்கு ஆதரவாக பிரச்சாரங்களை மேற்கொண்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணம்-வெங் ... தொடர்ச்சி...

மடங்கு குறைத்து அதன் ஊடாக பல ஏக்கர் நிலங்களில் வெங்காயத்தினை பயிர்செய்கை செய்துள்ளார்.

இதனை அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக வடமாகாண விவசாய பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நடுகை செய்யும் முறை காண்பிக்கப்பட்டது.

அத்துடன் குறிந்த இயந்திரத்தை எவ்வாறு இயக்குவது அதன் மூலம் எப்படி நடுகையினை மேற்கொள்வது போன்ற விடயங்கள் பயனாளிகளுக்கு காண்பிக்கப்பட்டது.

### கஜேந்திரகுமா... தொடர்ச்சி ...

கடும்போக்கில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்த அவர் என்னவும் செய்வார் என்பது இதன் மூலமாக உணர்த்தப்பட்டுள்ளது. சற்று தூர விலகியிருந்த சிங்கள கடும் போக்காளர்களை இதன் மூலம் தமக்கு ஆதரவாகக் கொண்டுவருவதிலும் ரணில் வெற்றிபெற்றிருக்கின்றார். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ராஜபக்ஷக்கள்தான் வரவேண்டும் என்ற தேவை இல்லை என்பதையும் அவர் சிங்கள மக்களுக்கு உணர்த்தியிருக்கின்றார். இது அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்ட நகர்வாகவும் இருக்கலாம்.

• • •

### சீனாவை எதிர் ... தொடர்ச்சி...

பாதுகாப்பு அமைச்சர் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளருடன் கைகுலுக்குவதை தவிர்த்து விட் டதாக தெரிவிக்கப் படுகின்றது.

தாய்வான் விவகாரம் தொடர் பில் இரு நாடுகளுக்கு மிடையில் விரிசல்கள் ஏற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்கொள்ள அமெரிக்கா இந்தியாவை பயன்படுத்த முற்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 22 ஆம் நாள் இந்திய பிரதமர் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் அதற்கான ஆயத்த பணிகளை மேற்கொள்வதற்கு அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் கடந்த வாரம் இந்தியா வந்திருந்தார்.

### வரலாற்றுத்... தொடர்ச்சி ...

வேண்டும். ஒரு சமூகத்தின் வரலாற்றின் சிறப்பம்சங்களை ஏனைய சமூகங்கள் பின்பற்ற வேண்டும். வரலாற்றுக் காயங்கள் கண்டறியப்பட்டு அவை மீளவும் நிகழாதவாறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு சமூகத்தின் காயப்பட்ட வரலாறு ஏனைய சமூகங்களுக்கு படிப்பினையாகும். இந்த வகையில் மலையக சமூகத்தின் காயமடைந்த வரலாறும் ஏனைய சமூகங்களுக்கு படிப்பினையேயாகும். இந் நிலையில் மலையக சமூகத்தின் 200 வருடகால வரலாற்றை தேசிய சர்வதேச சமூகங்களுக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனமான கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் களமிறங்கியுள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் 25 ம் திகதி வரை நடமாடும் அருங்காட்சியகத்தை 25 மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்ல நிறுவகம் தீர்மானித்துள்ளது. மேலும் மலையக மக்களின் 200 ஆண்டுகால வாழ்க்கைச் சுவடுகளை எடுத்துக் காட்டும் வகையில் இம்மாத நடுப்பகுதியில் கொழும்பு தேசிய நூதனசாலைக்கு அருகில் நடமாடும் அருங்காட்சியகமும் அமைக்கப்படவுள்ளது. சமூக பாதுகாப்பு கருதி, சமூக அபிவிருத்தி நிறுவகம் மேற்கொள்ளும் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவது சகலரினதும் கடமை யாகும்.

ஒரு சமூகத்தின் வரலாறு சாதகம் மிக்கதாக அமைவதற்கும் பாதுகாக்கப்படுவதற்கும் ஆட்சியாளர்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும். இந்த வகையில் காயமடைந்த மலையக மக்களின் வரலாற்றை நல்லபடியாக மாற்றியமைக்கும் முயற்சியில் இலங்கை அரசின் வகிபாகம் மிகவும் அவசியமானது என்பதை மறுப்பதற்கில்லை.

• • •

### அமெரிக்காவை ... தொடர்ச்சி ...

மேற்கொள்ளும் பயணத்தில், ரெல் அவிவுடன் உறவுகளை சீர்ப்படுத்தும்படி சவூதி அரேபியாவின் மீது அழுத்தத்தை பிளிங்கன் பிரயோகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்களுக்கான அணுச்சக்தித் திட்டங்கள், முக்கிய பாதுகாப்பு உத்தரவாதங்கள் என்பனவும் இதில் அடங்கியிருக்கிறது.

பாலஸ்தீனப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுக்காது, அமெரிக்காவின் சலுகைகளைப் பெறும் நோக்குடன் ஐக்கிய அரபு இராச்சியம், பாஹ்ரெய்ன், மொறொக்கோ, சூடான் ஆகிய நாடுகள் ஏற்கனவே இஸ்ரேலுடன் தங்களது உறவைப் புதுப்பித்திருக்கின்றன. அபுதாபிக்கு அமெரிக்கத் தயாரிப்பான எவ்-35 (F-35) விமானங்கள், மேற்கு சஹாராவில் உரிமைகொண்டாடும் மொறொக்கோவின் முயற்சி, காட்டூம் (Kartoum) மீதான தடைகளை நீக்குதல் போன்றவையே இந்த நாடுகள் எதிர்பார்க்கும் சலுகைகளாகும். இதே நேரம் இஸ்ரேல் அரசைப் பொறுத்தவரையில், அது எந்தவிதமான சலுகைகளை வழங்கவோ அல்லது பத்து ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கின்ற அதன் பாலஸ்தீன ஆக்கிரமிப்பை மீளப்பெறவோ தயாரில்லை என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

அமெரிக்கா தூர வைக்கப்படவேண்டிய, இரட்டைத்தன்மை வாய்ந்த சக்தி என்று அரபு மக்கள் எண்ணுவதற்கு, அரபு மக்களின் இதயங்களுக்கு மிக நெருக்கமாக இருக்கின்ற பாலஸ்தீனப் பிரச்சினை மட்டும் காரணமல்ல.

செய்மதித் தொலைக்காட்சிகள், மற்றும் சமூக வலைத்தளங்கள் என்பவற்றில் பகிரப்பட்டு வரும் செய்திகளின் காரணமாக, ஈராக்கில் அமெரிக்கா இழைத்த குற்றங்கள் மற்றும் ஆப்கானிஸ்தானில் அது சந்தித்த அவமானம் என்பவற்றை நேரடியாகப் பார்த்த தன் காரணத்தினால், நாகரிகத்தைப் பாதுகாக்கும் என்றோ அல்லது யாராலும் வெற்றிகொள்ளப்படமுடியாத சக்தி என்றோ அமெரிக்காவை அரபு மக்கள் இன்று கருதவில்லை. இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர், கடந்த இருபது வருடங்களாக மத்திய கிழக்கில் அமெரிக்கா மேற்கொண்ட செயற்பாடுகளை மதிப்பீடு செய்து பார்க்கும் போது, மத்திய கிழக்கில் அவர்களுக்குச் சாதகமான சூழல் இல்லை என்பதே உண்மையாகும்.

டோஹாவைத் தளமாகக் கொண்ட ஆய்வுக்கும் கொள்கைக் கற்றலுக்குமான அரபு மையத்தால் 2022இல் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் போது, மத்திய கிழக்குப் பிரதேசத்திற்கு அச்சுறுத்தலாகவும் அதே நேரம் அதன் உறுதித்தன்மைக்கு ஆபத்தாகவும் இருப்பது அமெரிக்காவே என்று 78 வீதமானோர் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். இதற்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில், வெறும் 57 வீதமானோரே ஈரானையும் ரஷ்யாவையும் அந்த நிலையில் வைத்துப் பார்த்தார்கள். இந்த இரண்டு நாடுகளும் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சிரியா, ஈராக், யேமன் போன்ற நாடுகளுக்குள் மூக்கை நுழைத்து அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

“ மில்லியன் எண்ணிக்கையிலான அரபுகள், முஸ்லீம்கள் ஆகியோரின் சாவுக்கும் அவர்களது சமூகங்களின் அழிவுக்கும் காரமாணமாக அமைந்த போர்களில் 5 இலிருந்து 7 ட்ரில்லியன் டொலர்களை அமெரிக்கா வீணடித்திருப்பதாக “மிகப் பெரும் மாயை: மத்திய கிழக்கில் அமெரிக்காவின் எதிர்பார்ப்பின் எழுச்சியும் வீழ்ச்சியும்” *(Grand Delusion: The Rise and Fall of American Ambition in the Middle East)* என்ற தனது நூலில் மேனாள் அமெரிக்க அதிகாரியான ஸ்ரீவன் சைமன் *(Stephen Simon)* மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார். இவை மட்டுமன்றி, இந்தப் போர்களின் காரணமாக ஆயிரக்கணக்கான அமெரிக்க சிப்பாய்கள் கொல்லப்பட்டும், பல்லாயிரக் கணக்கானோர் காயப்பட்டதுடன் கிட்டத்தட்ட 30000 அமெரிக்க வீரர்களின் தற்கொலைகளுக்கும் காரணமாக அமைந்திருக்கின்றன.

இவ்வாறான காரணங்களால், அதிகமான மத்திய கிழக்கு மக்கள் (அமெரிக்கர்களும்) அமெரிக்காவிலிருந்து ஒருசில விடயங்களிலாவது தம்மை விடுவித்துக்கொள்வது விரும்பத்தக்கது என்றும் அதே நேரம் தவிர்க்கமுடியாதது என்றும் கருதுகிறார்கள்.

அவ்வாறான ஒரு மாற்றம் நிகழுமானால், இரண்டு தரப்புக்குமே மிக மோசமான விளைவுகளை அது ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எதிர்காலத்தில் அமெரிக்கா தனது வெளியுறவுக்கொள்கையை மாற்றுமா? இல்லையா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அப்படியாயின் அது முற்றிலும் வேறொரு கருத்துரையாடலாக அமையும்.

**நன்றி: அல்ஜஸீரா**

### இலங்கையில் ... தொடர்ச்சி ...

ரூபாவின் பெறுமதி அதிகரித்துச் செல்கின்ற காரணத்தினால் தங்கத்தின் விலையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. மறுபுறம், உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கின்ற தளம்பல் காரணமாகவும் தங்கத்தின் விலைகள் மாற்றமடைகின்றன. அதனைவிட, சர்வதேச சந்தையில் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றமும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இப்போது இலங்கையில் தங்கத்தின் விலை சரிந்து செல்கின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இந்த சரிவு தொடருமா அல்லது மீண்டும் அதிகரித்து இரண்டு லட்சம் என்ற நிலையை அடையுமா என்பது இந்த மூன்று காரணிகளிலும் தங்கியிருக்கின்றது. முதலாவது, இலங்கையின் பொருளாதாரம் அதன் அடிப்படையில் ஏற்படும் மாற்றம், இரண்டாவது அமெரிக்க டொலர் உலக சந்தையில் தன்னுடைய பெறுமதியை எந்தளவுக்குத் தக்கவைத்துக்கொள்கின்றது என்பது. மூன்றாவது உலக பொருள் சந்தையில் ஏற்படுகின்ற மாற்றம் தங்கத்துக்குச் சார்பாக அமைகின்றதா இல்லையா என்பதைப் பொறுத்தது. இந்த மூன்று காரணிகளின் அடிப்படையில்தான் இந்த நிலைமை அதாவது தங்க விலையின் வீழ்ச்சி தொடருமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

இப்போது ஏற்பட்டிருக்கின்ற உள்நாட்டுக் காரணிகளை வைத்துப் பார்க்கின்ற போது இதனை தற்காலிகமான ஒரு நிலைமையாகத்தான் பார்க்க முடியும். பொருட்டகளின் விலை குறைகின்ற போது கொள்வனவு செய்வது சிறந்தது என்று மக்கள் கருதும் நிலையில் இப்போது கொள்வனவுக்கான காலம் என்றுதான் நான் கருதுகின்றேன்.

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இப்போது முக்கியமாகப் பேசப்படுகின்றது. இதற்கான தமது திட்டம் என்ன என்பதை அரசாங்கம் இதுவரையில் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. இதனை அரசாங்கம் எவ்வாறு நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?**

இலங்கையில் உள்நாட்டுக் கடன்கள் என்று பார்க்கின்ற போது, சுமார் 42 பில்லியன் அமெரிக்க டொலர் அளவில் இருக்கின்றது. இந்தக் கடன்களை மறுசீரமைக்கின்ற போது சுமார் 30 வீதமான கடன்களை குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அதனுடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது இந்த 42 பில்லியனும் எந்த வடிவிலே கடன்களாகப் பெறப்பட்டிருக்கின்றது என்று பார்த்தால், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணையங்களின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. வங்கிகளிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றது. இதனைவிட ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்றவற்றிலிருந்து பெறப்பட்டிருக்கின்றது. இதனைவிட மத்திய வங்கி பணத்தை அச்சிட்டு பணத்தை கடனாக அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கின்றது. இதில் மூன்று, நான்கு கூறுகள்தான் முக்கியமான கூறுகளாக இருக்கின்றன.

ஊழியர் சேமலாக நிதியம் போன்றன மக்கள் பணம். அரசாங்கம் கடன் மறுசீரமைப்பைச் செய்கின்ற போது இதில் பாதிப்பு ஏற்படுமா என்ற நியாயமான சந்தேகம் அனைவருக்கும் எழுகின்றது. ஆனால், இது தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது இதில் பாதிப்பு ஏற்படாத வகையில்தான் கடன் மறுசீரமைப்பு செய்யப்படும் என்று அரச தரப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனால், இந்த கடன் மறுசீரமைப்பை எவ்வாறு செய்யப்போகின்றார்கள் என்பதைற்கான தங்களுடைய வேலைத் திட்டம் என்ன என்பதை அரசாங்கம் இதுவரையில் வெளிப்படையாகவோ, திட்டவட்டமாகவோ இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. ஆனால், பெறப்பட்ட கடன்களைக் குறைப்பது என்பது, கடன் கொடுத்தவர்கள் இணங்கும் பட்சத்தில் மட்டும்தான் சாத்தியமாகும். வங்கிகள் கடன் வழங்கியுள்ளன, ஈபி.எப்., ஈ.ரி.எப். கடன் வழங்கியுள்ளது. மத்திய வங்கி கடன் வழங்கியுள்ளது. எனவே இந்த நிறுவனங்கள் எவ்வாறு இந்தக் கடன்களைக் குறைப்பதற்கு இணங்கப்போகின்றன, அவ்வாறு குறைக்கும் போது ஏற்படப்போகும் பாதிப்புக்களை எவர் மீது கொண்டு சென்று சுமத்தப்போகின்றார்கள் என்பதை இதுவரையில் யாரும் தெரிவிக்கவில்லை.

இது தொடர்பான தமது திட்டம் என்ன என்பதை அரசாங்கம் வெளிப்படையாக அறிவிக்கும் வரை ஊகங்கள்தான் பரவலாக இருக்கும்.

• • •

# பயனுள்ள சமையலறை குறிப்புக்கள்

- வாழைப்பழத்தின் காம்பு பகுதியை பிளாஸ்டிக்கால் சுற்றிவைத்தால், நான்கு நாட்கள்வரை கருகாமல் அப்படியே இருக்கும்.



- கறிவேப்பிலை காயாமல் இருப்பதற்கு ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் காயாமல் இருக்கும்.
- இட்லி மாவு புளிக்காமல் இருப்பதற்கு வெற்றிலையை காம்பு கிள்ளாமல் பாத்திரத்தில் குப்புற இருப்பது போல போடவும். இரண்டு நாட்கள் கெடாமலும், புளிக்காமலும் இருக்கும்.
- தோசைகல்லில் தோசை சுடும் போது தோசை மாவில் சிறிது சர்க்கரையைப் போட்டு தோசை சுட்டால் மொரு மொறுப்பாக வரும்.
- கறிவேப்பிலை காய்ந்து விட்டால் அதனை தூக்கி எறிந்துவிடாமல் இட்லி பானையில் அடியில் தண்ணீரில் கறிவேப்பிலையை போட்டு இட்லி சுட்டால் வாசனையாக இருக்கும்.
- வறுத்த வெந்தயத்தை சாம்பாரில் போட்டால் சாம்பார் சுவையாகவும், வாசனையாகவும் இருக்கும்.
- கிழங்குகள் சீக்கிரம் வேக வைப்பதற்கு பத்து நிமிடம் உப்பு கலந்த நீரில் ஊற வைத்து விட்டு வேக வைத்தால் சீக்கிரம் வெந்துவிடும்.
- வெயில் காலத்தில் பெருங்காயம் கட்டியாகி விடும். அப்படி ஆகாமலிருக்க பச்சை மிளகாயை காம்பு எடுக்காமல் பெருங்காய டப்பாவில் போட்டால் பஞ்சு போல் மிருதுவாக இருக்கும்.
- சப்பாத்திக்கு மாவு பிசைவதற்கு முன்னால் கையில் சிறிதளவு உப்பைத் தடவிக் கொண்டால் கையில் சப்பாத்தி மாவு ஒட்டாது.
- பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.
- கோதுமை மாவில் வண்டு பிடிக்காமல் இருப்பதற்காக சிறிதளவு உப்பை கலந்து வைத்தால் வண்டு பிடிக்காது.
- செப்பு பாத்திரம் மங்காமல் இருப்பதற்காக சிறிது உப்பையும், வினிகரையும் பாத்திரத்தின் மேல் பூசி துணியால் அழுத்தி தேய்த்தால் பாத்திரம் பளிச்சின்னு இருக்கும்.
- மிக்ஸி ஜாடியில் உள்ள பிளேடை கழற்ற இயலாமல் இருந்தால், அதை கழற்றுவதற்கு ஜாடியில் பிளேடு மூழ்கும் வரை வெண்ணீர் ஊற்றி சிறிது நேரம் வரை வைக்கவும். பின்பு நீரைகிழே ஊற்றி விட்டு பிளேடை கழற்றினால் எளிதில் கழற்றலாம்.



- இட்லி சாம்பாரில் கடைசியாக மிளகு, சீரகம், காய்ந்த மிளகாய், கொத்தமல்லி போன்றவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு வறுத்து விட்டு மிக்ஸியில் அரைத்து சாம்பாரில் போட்டால் கூடுதல் சுவையாக இருக்கும்.
- உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.
- வற்றல் குழம்பு வைக்கும்போது சிறிதளவு கடுகு, மஞ்சள்தூள், மிளகாய் வற்றல் போன்றவற்றை வெறும் பாத்திரத்தில் போட்டு வறுத்து அதனை தூளாக்கி குழம்பில் போட்டு இறக்கினால் நல்ல மணமாக இருக்கும்.
- சப்பாத்தி எப்போதும் சூடாக இருக்க வேண்டுமானால் சில்வர் பேப்பரில் சுற்றி வைத்தால் சூடாக இருக்கும்.



- உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.
- ரசம் செய்யும்போது அதனுடன் தேங்காய் தண்ணீரைச் சேர்த்தால் அருமையான ருசியாக இருக்கும்.
- முட்டைகோசில் உள்ள தண்டை வீணாக்காமல் சாம்பாரில் போட்டு சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.
- காய்கறிகள் வறுக்கும்போது எண்ணெய் சூடாகும் போது சிறிது சர்க்கரை சேர்த்து செய்தால் சுவையாக இருக்கும்.
- இட்லி சுடும்போது மாவில் ஒரு கிண்ணம் நல்லெண்ணெய் ஊற்றி கலந்து இட்லி சுட்டால் மிருதுவாக இருக்கும். இரண்டு நாட்கள் கெடாமலும் இருக்கும்.
- சமையலில் உப்பு அதிகமாக போய்விட்டால் உருளைகிழங்கை அதில் அறிந்து போட்டால் உப்பை எடுத்துவிடும்.
- கொத்தமல்லி இலைகளை நன்கு ஆய்ந்து விட்டு, தண்ணீரில் அலசி காய வைத்து, காற்று புகாத டப்பாவில் வைத்தால் நிறைய நாட்கள் கெடாமல் இருக்கும்.
- உருளைக்கிழங்கு போண்டா செய்வது போல எல்லா காய்கறிகளையும் போட்டு வதக்கி அதை உருட்டி கடலை மாவில் நனைத்து எடுத்து எண்ணெயில் போட்டு பொரித்தால் வெஜிடபுள் போண்டா செய்யலாம். குழந்தைகள் காய்கறிகளை சாப்பிடுவதற்கு எளிய வழியாக இருக்கும்.
- காபி டிகாஷன் போடுவதற்கு முன் சுடு தண்ணீரில் டிகாஷன் பாத்திரத்தை வைத்துவிட்டு டிகாஷன் போட்டால் சீக்கிரம் காப்பித்தூள் இறங்கிவிடும்.
- அரிசி மற்றும் காய்கறிகள் கழுவிய தண்ணீரை வீணாக்காமல் செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் செழிப்பாக இருக்கும்.
- சேனைகிழங்கு சீக்கிரம் வேக வைப்பதற்கு வெறும் பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் சிறிது உப்பு போட்டு வெடிக்கும் வரை வறுத்துவிட்டு, பின்பு தண்ணீர் ஊற்றி கொதி வந்ததும் கிழங்கை போட்டால் சீக்கிரம் வெந்துவிடும்.
- புளிகுழம்பு வைக்கும் போது கடைசியில் மிளகு, சீரகம் அரைத்து பொடியை போட்டால் சுவையாக இருக்கும்.
- இறைச்சியை வேக வைக்கும் போது சிறிது பாக்கு சேர்த்து வேக வைத்தால் சீக்கிரம் வெந்து விடும்.



- எண்ணெய் பலகாரங்கள் டப்பாவில் வைக்கும்போது உப்பைத் துணியில் முடிந்து வைத்தால் காரல் வாடை வராது.
- சீடை செய்யும்போது அது வெடிக்காமல் இருப்பதற்காக சீடையை ஊசியால் குத்திய பிறகு எண்ணெய்யில் போட்டால் வெடிக்காது.
- தோசை சுடும்போது தோசைக்கல்லில் மாவு ஒட்டிக்கொண்டு தோசை வராமல் இருந்தால் அதற்கு கொஞ்சம் புளியை ஒரு வெள்ளைத்துணியில் கட்டி, அதை எண்ணெய்யில் தொட்டு கல்லில் தேய்த்துவிட்டு தோசை சுட்டால் நன்றாக வரும்.
- காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்க கூடாது. ஏன் என்றால் காய்கறிகளில் உள்ள வைட்டமின் சத்துகள் போய்விடும். அதில் உள்ள மனமும் போய்விடும்.
- ரவா உப்புமா அதிகமாகி விட்டால் அதில் சிறிதளவு அரிசி மாவைக் கலந்து வடை போல் தட்டி எண்ணெயில் பொரித்து எடுத்தால் சுவையாக இருக்கும்.
- ரவா,மைதா உள்ள டப்பாவில் பூச்சி, புழுக்கள் வராமல் இருப்பதற்கு கொஞ்சம் வசம்பை தட்டிப் போட்டால் பூச்சி, புழுக்கள் வராது.
- கொழுக்கட்டை மாவு பிசையும் போது ஒரு கரண்டி பால் சேர்த்து பிசைந்து கொழுக்கட்டை சுட்டால் விரிந்து போகாமல் இருக்கும்.
- தயிர் நீண்ட நேரம் புளிக்காமல் இருக்க இஞ்சியின்தோலை சீவி விட்டு கொஞ்சம் தட்டி தயிரில் போட்டால் புளிக்கவே புளிக்காது.
- தயிர் புளிக்காமல் இருக்க ஒரு துண்டு தேங்காயைப் போட்டு வைத்தால் புளிக்காது.
- வாழைப்பூ வாழைத்தண்டு ஆகியவற்றை நறுக்கி மோர் கலந்த நீரில் வைத்தால் நிறம் மாறாமல் இருக்கும். கறையும் பிடிக்காது. அதில் உள்ள துவர்ப்பும் நீங்கி விடும்.
- மழைகாலத்தில் உப்பில் நீர் சேர்ந்து விடாமல் இருப்பதற்காக நாலைந்து அரிசியை உப்பு ஜாடியில் போட்டு வைத்தால் தண்ணீர் படியாமல் இருக்கும்.
- நெய் கெடாமல் இருப்பதற்கு அதோடு ஒரு வெல்லத்துண்டை போட்டு வைத்தால் கெடாமல் இருக்கும்.
- இடியாப்பம் செய்து மீந்து விட்டால் அதனை ஒரு நாள் முழுவதும் புளித்த தயிரில் ஊற வைத்துவிட்டு, நிழலில் உலர்த்தி வற்றலாக்கி வைத்துக் கொள்ளலாம். நன்றாக காய்ந்த பின் டப்பாவில் எடுத்து வைத்துக் கொண்டு தேவையான போது வறுத்து சாப்பிடலாம்.
- பாகற்காயை சமைப்பதற்கு முன்னால் அரைமணி நேரம் உப்பு கலந்த நீரில் ஊற வைத்தால் அதன் கசப்பு போய்விடும்.

**வலைத்தளத்தில் பகிரப்பட்டது.**